**BASED ON THE UPDATED NEW TEXTBOOK**

Limited stock Only

ENGLISH மற்றும் தமிழ் மீடியம்




# SURA'S

# 12th std School Guides

100% SUCCESS

அனைத்து புத்தகக் கடைகளிலும் கிடைக்கிறது

**2023-24 பதிப்பு**

100/100

Available on

surabooks.com

orders@surabooks.com

call @ 8124201000 | 8124301000

9600175757 / 8056294222 / 7871802000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

சுராவின்

# கணக்குப்பதிவியல்

# 12ஆம் வகுப்பு

**புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.**

## சிறப்பம்சங்கள் :

- பாடப்பகுதியில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடைகள் தரப்பட்டுள்ளன.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- கொள்குறி (Objective) வகையிலான 1 மதிப்பெண் வினாக்கள் கீழ்க்கண்ட தலைப்புகளில் தரப்பட்டுள்ளன.
    1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்
    2. பொருத்துதல்
    3. கோடிட்ட இடத்தை நிரப்புதல்
    4. பொருந்தாததை கண்டறிதல்
    5. கூற்று மற்றும் காரணம்
    6. சரியான கூற்றைக் கண்டறிதல்
- அரசு மாதிரி வினாத்தாள் – 2019 *[Govt. MQP-2019]*, காலாண்டுத் தேர்வு – 2019 *[QY-2019]*, அரையாண்டுத் தேர்வு – 2019 *[HY-2019]*, பொதுத்தேர்வு மார்ச் 2020 & மே 2022 *[Mar-2020 & May-'22]*, அரசு துணைத்தேர்வு செப்டம்பர் 2020 & ஆகஸ்ட் 2021 *[Sep-2020 & Aug-2021]*, முதல் மற்றும் இரண்டாம் திருப்புதல் தேர்வு 2022 *[FRT-'22 & SRT-'22 ]* மற்றும் உடனடித் தேர்வு ஜூலை 2022 *[July-'22]* வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- மாதிரி வினாத்தாள்கள் 1 முதல் 6 வரை (*PTA*) வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- உடனடித் தேர்வு ஜூலை 2022 வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**சுரா பப்ளிகேஷன்ஸ்**

*சென்னை*

**For Orders Contact**

**80562 94222 / 81242 01000 / 81243 01000**
**96001 75757 / 78718 02000 / 98409 26027**

orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

**2023-24** புதிய பதிப்பு
© வெளியீட்டாளர்கள்

ISBN : **978-93-5330-533-8**
குறியீட்டு எண் : SG 196

**எழுதி வழங்கியவர்**

**P.G. சத்யா ராதாகிருஷ்ணன்** M.Com., M.Phil., MBA., நாகர்கோவில்
**M. பரமேஸ்வரன்** M.Com., M.Phil., திருச்சி
**S. சந்தோஷ் குமார்** M.Com., B.Ed., சென்னை

**திருத்தியவர்**

**K. லலிதா கிருஷ்ணன்** M.Com., B.Ed., மதுரை
**R. கீதா** M.Com., சென்னை

**மதிப்பாளர்**

**Dr. M. ராமகிருஷ்ணன்** M.Com., M.Phil., Ph.D., சென்னை

**Our Guides for XI & XII Standard**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

**தலைமை அலுவலகம்**

**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phones :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**e-mail :** orders@surabooks.com
**website :** www.surabooks.com

**For Orders Contact**

**80562 94222**
**81242 01000**
**81243 01000**
**96001 75757**
**78718 02000**
**98409 26027**

23/11/2022



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# பதிப்பாசிரியர் உரை

12ம் வகுப்பிற்கான சுராவின் **கணக்குப்பதிவியல்** வழிகாட்டியை வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். **கணக்குப்பதிவியல்** பாடங்களுக்கான வினா விடைகள் /கணக்குகள் மிகவும் எளிமையாக, சுலபமாக புரிந்துகொள்ளும் விதத்தில் தரப்பட்டுள்ளன.

சுராவின் **கணக்குப்பதிவியல்** வழிகாட்டி மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலை நன்கு மதிப்பாய்வு செய்து மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் வெகுவாக உட்கிரகித்து அறிந்துகொண்டு தேர்வை சுலபமாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெற்று வெற்றியாளர்களாகும் விதத்தில், நமது வெற்றிக்கான இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பாடம் நடத்துவதிலும், மாணவர்களுக்குக் கற்றுக்கொள்வதிலும் இந்த வழிகாட்டி துணையாக இருக்கும்.

நமது சுராவின் **கணக்குப்பதிவியல்** வழிகாட்டியில் இது போன்ற பல சிறப்பம்சங்கள் அடங்கியிருந்தாலும், **கணக்குப்பதிவியல்** பாடத்தை மாணவர்கள் புரிந்துகொள்ள உதவிடும் ஆசிரியர்களின் பணியும் மகத்தானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
- பதிப்பகத்தார்

*வாழ்த்துக்கள் !!!*



www.surabooks.com

orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **36550290536** |
| Bank Name | : | **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : | Padi |
| IFSC | : | SBIN0005083 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **21000210001240** |
| Bank Name | : | **UCO BANK** |
| Bank Branch | : | Anna Nagar West |
| IFSC | : | UCBA0002100 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **6502699356** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| Bank Branch | : | Asiad Colony |
| IFSC | : | IDIB000A098 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **1154135000017684** |
| Bank Name | : | **KVB BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | KVBL0001154 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **13240200032412** |
| Bank Name | : | **FEDERAL BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | FDRL0001324 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **50200031530945** |
| Bank Name | : | **HDFC BANK** |
| Bank Branch | : | Cenotaph Road, Teynampet |
| IFSC | : | HDFC0001216 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **446205000010** |
| Bank Name | : | **ICICI BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | ICIC0004462 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

GPay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phones : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# பொருளடக்கம்


| அலகு எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள் | 1 - 37 |
| 2. | இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்குகள் | 38 - 75 |
| 3. | கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள் – அடிப்படைகள் | 76 - 111 |
| 4. | கூட்டாண்மை கணக்குகள் – நற்பெயர் | 112 - 132 |
| 5. | கூட்டாளி சேர்ப்பு | 133 - 172 |
| 6. | கூட்டாளி விலகல் மற்றும் கூட்டாளி இறப்பு | 173 - 211 |
| 7. | நிறுமக் கணக்குகள் | 212 - 254 |
| 8. | நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு | 255 - 283 |
| 9. | விகிதப் பகுப்பாய்வு | 284 - 317 |
| 10. | கணினி கணக்கியல் முறை – Tally | 318 - 330 |
| | உடனடித் தேர்வு ஜூலை 2022 வினாத்தாள் விடைகளுடன் | 331 - 346 |




www.surabooks.com

orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores






orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# பதிப்பாசிரியர் உரை

**12**ம் வகுப்பிற்கான சுராவின் **கணக்குப்பதிவியல்** வழிகாட்டியை வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். **கணக்குப்பதிவியல்** பாடங்களுக்கான வினா விடைகள் /கணக்குகள் மிகவும் எளிமையாக, சுலபமாக புரிந்துகொள்ளும் விதத்தில் தரப்பட்டுள்ளன.

சுராவின் **கணக்குப்பதிவியல்** வழிகாட்டி மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலை நன்கு மதிப்பாய்வு செய்து மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் வெகுவாக உட்கிரகித்து அறிந்துகொண்டு தேர்வை சுலபமாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெற்று வெற்றியாளர்களாகும் விதத்தில், நமது வெற்றிக்கான இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பாடம் நடத்துவதிலும், மாணவர்களுக்குக் கற்றுக்கொள்வதிலும் இந்த வழிகாட்டி துணையாக இருக்கும்.

நமது சுராவின் **கணக்குப்பதிவியல்** வழிகாட்டியில் இது போன்ற பல சிறப்பம்சங்கள் அடங்கியிருந்தாலும், **கணக்குப்பதிவியல்** பாடத்தை மாணவர்கள் புரிந்துகொள்ள உதவிடும் ஆசிரியர்களின் பணியும் மகத்தானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
- பதிப்பகத்தார்

*வாழ்த்துக்கள் !!!*



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000
www.surabooks.com

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# பொருளடக்கம்


| அலகு எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள் | 1 - 37 |
| 2. | இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்குகள் | 38 - 75 |
| 3. | கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள் – அடிப்படைகள் | 76 - 111 |
| 4. | கூட்டாண்மை கணக்குகள் – நற்பெயர் | 112 - 132 |
| 5. | கூட்டாளி சேர்ப்பு | 133 - 172 |
| 6. | கூட்டாளி விலகல் மற்றும் கூட்டாளி இறப்பு | 173 - 211 |
| 7. | நிறுமக் கணக்குகள் | 212 - 254 |
| 8. | நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு | 255 - 283 |
| 9. | விகிதப் பகுப்பாய்வு | 284 - 317 |
| 10. | கணினி கணக்கியல் முறை – Tally | 318 - 330 |
| | உடனடித் தேர்வு ஜூலை 2022 வினாத்தாள் விடைகளுடன் | 331 - 346 |




www.surabooks.com

orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# அலகு 1

# முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்

## பொருளடக்கம்


1.1 அறிமுகம்
1.2 முழுமை பெறா பதிவேடுகளின் பொருள்
1.3 முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள்
1.4 முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள்
1.5 இரட்டைப் பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள்
1.6 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்
1.7 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து நிலை அறிக்கை வாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறிதல்
1.7.1 நிலை அறிக்கை வாயிலாக இலாப அல்லது நட்டம் கண்டறிதல்
1.7.2 நிலையறிக்கை தயாரித்து இலாபம் அல்லது நட்டம் கண்டறிவதற்கான படிநிலைகள்
1.7.3 நிலை அறிக்கை
1.7.4 நிலை அறிக்கையின் படிவம்
1.7.5 நிலை அறிக்கைக்கும் இருப்புநிலைக் குறிப்புக்கும் உள்ள வேறுபாடுகள்
1.8 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல்
1.8.1 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது பின்பற்ற வேண்டிய படி நிலைகள்


www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



# சுய ஆய்வு வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :**

**1. முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது** *[PTA-1; Aug-'21; FRT & July -'22]*

(அ) நிறுமம் (ஆ) அரசு

(இ) சிறிய அளவிலான தனிஆள் வணிகம்

(ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்

**[விடை. (இ) சிறிய அளவிலான தனிஆள் வணிகம்]**

**2. நிலை அறிக்கை ஒரு** *[PTA-2; QY-'19; FRT & May-'22]*

(அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை

(ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை

(இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு

(ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு

**[விடை. (ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை]**

**3. தொடக்க நிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது.** *[PTA-3]*

(அ) தொடக்க முதல் கண்டறிய

(ஆ) இறுதி முதல் கண்டறிய

(இ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய

(ஈ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய

**[விடை. (அ) தொடக்க முதல் கண்டறிய]**

**4. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்** *[PTA-4; QY-'19; Sep-2020; FRT, May & July-'22]*

(அ) நட்டம் (ஆ) ரொக்கம்

(இ) முதல் (ஈ) இலாபம்

**[விடை. (இ) முதல்]**

**5. கீழ்க்கண்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு தொடர்பான எந்த விவரம் மொத்தக் கடனீந்தோர் கணக்கிற்கு மாற்றப்படுகிறது?** *[PTA-5; FRT-'22]*

(அ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் தொடக்க இருப்பு

(ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் இறுதி இருப்பு

(இ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு

(ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு ரொக்கம் செலுத்தியது

**[விடை. (இ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட செலுத்தற்குரியமாற்றுச்சீட்டு]**

**6. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது** *[PTA-5; QY-'19; Sep-2020; FRT-'22]*

(அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு

(ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு

(இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

(ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

**[விடை. (அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு]**

**7. முழுமை பெறா பதிவேடுகள் தொடர்பான கீழ்க்கண்ட எந்த வாக்கியம் சரியானது அல்ல?** *[Govt. MQP-'19; PTA-4]*

(அ) இது நடவடிக்கைகளை பதிவு செய்யும் அறிவியல் தன்மையற்ற முறை

(ஆ) ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகளுக்கு மட்டும் ஏடுகள் பராமரிக்கப்படுகிறது.

(இ) இது அனைத்து வகையான அமைப்புகளுக்கும் பொருந்தும்

(ஈ) வரி அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதில்லை.

**[விடை. (இ) இது அனைத்து வகையான அமைப்புகளுக்கும் பொருந்தும்]**

**8. உரிமையாளரின் சொத்துகள் ₹85,000 மற்றும் பொறுப்புகள் ₹21,000 எனில் அவருடைய முதல்தொகை** *[PTA-3; HY-'19]*

(அ) ₹85,000 (ஆ) ₹1,06,000

(இ) ₹21,000 (ஈ) ₹64,000

**[விடை. (ஈ) ₹64,000]**

**குறிப்பு :**

முதல் = சொத்துகள் – பொறுப்புகள்

= ₹85,000 – ₹21,000 = ₹64,000

**9. தொடக்க முதல் ₹10,000, அவ்வாண்டின் எடுப்புகள் ₹6,000, அவ்வாண்டின் இலாபம் ₹2,000 மற்றும் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹3,000 எனில் இறுதி முதல் காணவும்.** *[PTA-2; FRT-'22]*

(அ) ₹9,000 (ஆ) ₹11,000

(இ) ₹21,000 (ஈ) ₹3,000

**[விடை. (அ) ₹9,000]**



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000
www.surabooks.com

This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**குறிப்பு :**

| விவரம் | ₹ |
|---|---|
| இறுதி முதல் | 9,000 |
| **கூட்டுக :** எடுப்புகள் | 6,000 |
| | 15,000 |
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 3,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் | 12,000 |
| **கழிக்க :** தொடக்க முதல் | 10,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 2,000 |

**10. கடனாளிகள் தொடக்க இருப்பு : ₹30,000, பெற்ற ரொக்கம் : ₹1,00,000, கடன் விற்பனை : ₹90,000; கடனாளிகள் இறுதி இருப்பு :?** *[PTA-1, 6]*

(அ) ₹30,000 (ஆ) ₹1,30,000

(இ) ₹40,000 (ஈ) ₹20,000

**[விடை. (ஈ) ₹20,000]**

**குறிப்பு :**

ப **மொத்தக் கடனாளிகள் க/கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 30,000 | ரொக்கக் க/கு (பெற்றது) | 1,00,000 |
| கடன் விற்பனை | 90,000 | இருப்பு கீ/இ | 20,000 |
| | 1,20,000 | | 1,20,000 |

## II. மிகக் குறுகிய வினாக்கள் :

**1. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?** *[July-'22]*

விடை. (i) கணக்கேடுகள், இரட்டைப் பதிவு முறையின் படி பராமரிக்கப்படாத போது அந்த பதிவேடுகள் முழுமைபெறா கணக்கியல் பதிவேடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

(ii) பொதுவாக, ரொக்கக் கணக்கு மற்றும் ஆள்சார் கணக்குகளான வாடிக்கையாளர் மற்றும் கடனீந்தோர் கணக்கு மட்டுமே முழுமையாகவும், பிற கணக்குகள் தேவைக்கேற்பவும் பராமரிக்கப்படுகின்றன.

**2. இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனிவணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.** *[PTA-2; FRT-'22]*

விடை. ரொக்கக் கணக்கு, ஆள்சார் கணக்குகளான வாடிக்கையாளர் மற்றும் கடனீந்தோர் கணக்கு மட்டுமே முழுமையாகவும், பிற கணக்குகள் தேவைக்கேற்பவும் பராமரிக்கப்படுகின்றன.

**3. நிலை அறிக்கை என்றால் என்ன?** *[PTA-3; QY'19; Sep-2020; FRT & May-'22]*

விடை. (i) நிலை அறிக்கை என்பது ஒரு குறிப்பிட்ட நாளுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இருப்பைக்காட்டும் ஒரு அறிக்கை ஆகும்.

(ii) சொத்துகளின் இருப்புகள் வலது பக்கமும் மற்றும் பொறுப்புகளின் இருப்புகள் இடது பக்கத்திலும் காண்பிக்கப்பெறும்.

(iii) மொத்தச் சொத்துகள் மற்றும் மொத்தப் பொறுப்புகளின் வேறுபாட்டுத் தொகை முதலாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## III. குறுகிய வினாக்கள் :

**1. முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை?** *[PTA-1; FRT-'22]*

விடை. **முழுமைபெறா பதிவேடுகளின் இயல்புகள் :**

(i) **தன்மை :** இது நடவடிக்கைகளை அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற முறையில் பதிவு செய்யும் ஒரு முறையாகும் இதில் கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்கியல் தரநிலைகள் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை.

(ii) **பராமரிக்கப்படும் கணக்கின் வகைகள் :** பொதுவாக, ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகள் மட்டும் முழுமையாகப் பராமரிக்கப்படுகின்றன. சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை. சில நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுவதே இல்லை.

(iii) **சீரற்றத் தன்மை :** பல்வேறு நிறுவனங்களுக்கிடையில் நடவடிக்கைகளை பதிவு செய்வதில் சீரற்றத் தன்மை காணப்படுகிறது. வெவேறு நிறுவனங்கள் தங்கள் தேவைகள் மற்றும் வசதிகளுக்கேற்ப நடவடிக்கைகளைப் பதிவு செய்கின்றன.

(iv) **பொருந்தும் தன்மை :** கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பின்பற்ற சட்டப்படியான கடமையுள்ள நிறுவனங்கள் அல்லாத பிற நிறுவனங்கள் முழுமை பெறா பதிவேடுகளைப் பராமரிக்கலாம். எனவே, சிறு அளவிலான தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மை கணக்குகள் இம்முறையில் பராமரிக்கலாம்.

**2. முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை?** *[PTA-2]*

விடை. **முழுமைபெறா பதிவேடுகளின் குறைபாடுகள் பின்வருமாறு :**

(i) **பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்படாமை:** இது ஒரு அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற கணக்கேடுகள் பராமரிப்பு முறையாகும். சொத்துக் கணக்குகள் மற்றும் பெயரளவுக் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை.

(ii) **இருப்பாய்வு தயாரிப்பது கடினம் :** கணக்குகள், எல்லா விவரங்களுக்கும் பராமரிக்கப்படாததால் கணக்கேடுகள் முழுமையற்றதாக உள்ளன. எனவே, கணக்குகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை அறிந்துகொள்ள இருப்பாய்வினைத் தயாரிப்பது கடினம்.





orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(iii) **வியாபாரத்தின் உண்மையான இலாபம் ஈட்டும் திறனை கண்டறிவது கடினம் :** இலாபம், பெறப்படும் தகவல்கள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து கணக்கிடப்படுகிறது. எனவே, வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு துல்லியமாக தயாரிக்க முடியாததால் உண்மையான இலாபத்தை கண்டறிவது கடினம்.

(iv) **வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிதல் கடினம் :** பொதுவாக, முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மதிப்பீடுகள் மட்டுமே பெறப்படுகிறது. எனவே, ஒரு குறிப்பிட்ட நாளின் உண்மையான மற்றும் நேர்மையான நிதிநிலைத் தன்மை அல்லது நிதி நிலையை கண்டறிவது கடினமாக உள்ளது.

(v) **தவறுகள் மற்றும் மோசடிகள் எளிதாக கண்டறிய முடியாது :** பதிவேடுகளின் ஒரு பகுதி மட்டுமே பெறப்படுவதால், கணக்கேடுகள் பராமரித்தலின் போது அகச்சோதனை செய்து தவறுகள் மற்றும் மோசடிகளைக் கண்டறிய முடியாமல் இருக்கலாம்.

**3. இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**
*[Govt. MQP-'19; PTA-3; Aug-'21; FRT-'22]*

விடை.

| வ. எண். | வேறுபாட்டின் அடிப்படை | இரட்டைப்பதிவு முறை | முழுமைபெறா பதிவேடுகள் |
|---|---|---|---|
| 1. | நடவடிக்கைகளைப் பதிவு செய்தல் | அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு ஆகிய இரு தன்மைகளும் பதிவு செய்யப்படுகின்றன. | அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள் முழுமையாகப் பதிவு செய்யப்படுவதில்லை. |
| 2. | சரியான இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுதல் | சரியான இலாபம் அல்லது நட்டம் கண்டறிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு தயாரிக்கப்படுகிறது. | முழுமையானத் தகவல்கள் பெற முடியாததால் வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கு துல்லியமாக தயாரிக்க முடியாது. எனவே. கண்டறிந்த இலாபம் அல்லது நட்டம் துல்லியமாக இருக்காது. |
| 3. | பொருந்தும் தன்மை | இது அனைத்து அமைப்புகளுக்கும் பொருந்தக் கூடிய ஒன்றாகும். | இது சிறிய அளவிலான தனி ஆள் வணிகம் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு பொருந்தலாம். |
| 4. | நம்பகத்தன்மை | இது, அறிவியல்பூர்வமான கணக்கியல் முறை மற்றும் சில கணக்கியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் நம்பகத் தன்மையுடையதாகும். | இது அறிவியல் தன்மையற்றதால் நம்பகத்தன்மை உடையதல்ல. |
| 5. | ஏற்புத்தன்மை | கணக்கியல் பதிவேடுகள் வரி அதிகாரிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உட்பட அனைத்து பயனாளர்களுக்கும் ஏற்புடையதாகும். | கணக்கியல் பதிவேடுகள் அனைத்துப் பயனாளர்களுக்கும் ஏற்புடையதல்ல. |

**4. நிலை அறிக்கை வாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறியும் படிநிலைகளைத் தரவும்.**

விடை. நிலையறிக்கை தயாரித்து இலாபம் அல்லது நட்டம் கண்டறிவதற்கான படிநிலைகள் பின்வருமாறு :

(i) ஆண்டு தொடக்கத்தில் உள்ள சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் இருப்புகளைக் கொண்டு தொடக்க நிலையறிக்கை தயாரித்து தொடக்க முதலைக் கண்டறியவும்.

(ii) கணக்காண்டின் இறுதியில் தேய்மானம், வாராக்கடன், கொடுபட வேண்டிய மற்றும் முன்கூட்டி செலுத்திய செலவுகள், பெற வேண்டிய வருமானம், முதல் மீது வட்டி, எடுப்பு மீது வட்டி போன்றவற்றிற்குத் தேவையான சரிக்கட்டுதல்களைச் செய்தபின் இறுதி நிலையறிக்கை தயாரித்து இறுதிமுதல் கண்டறியவும்.


orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000
www.surabooks.com

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(iii) இறுதி முதலுடன் எடுப்புத் தொகையினை (பணம் மற்றும் பொருட்கள் இரண்டும்) கூட்டவும்.

(iv) சரிக்கட்டப்பட்ட இறுதிமுதலைக் கண்டறிய கூடுதல் முதலைக் கழிக்கவும்.

(v) சரிக்கட்டப்பட்ட இறுதி முதலிலிருந்து தொடக்க முதலைக் கழித்து இலாபம் அல்லது நட்டத்தினைக் கண்டறியவும்.

(அ) சரிக்கட்டப்பட்ட இறுதி முதலானது தொடக்க முதலை விட அதிகமானதாக இருந்தால், அது இலாபத்தைக் குறிக்கும்.

(ஆ) சரிக்கட்டப்பட்ட இறுதி முதலானது தொடக்க முதலை விட குறைவானதாக இருந்தால், அது நட்டத்தைக் குறிக்கும்.

**5. நிலை அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.**

*[PTA-1; HY-'19; Aug-'21; FRT-'22]*

விடை.

| வ. எண். | வேறுபாட்டிற்கான அடிப்படை | நிலை அறிக்கை | இருப்புநிலைக் குறிப்பு |
|---|---|---|---|
| 1. | நோக்கம் | நிலை அறிக்கை பொதுவாக வியாபாரத்தின் முதலை கண்டறிய தயாரிக்கப்படுகிறது. | இருப்புநிலைக் குறிப்பு வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிய தயாரிக்கப்படுகிறது. |
| 2. | கணக்கியல் முறை | இரட்டைப்பதிவு முறையை பின்பற்றுவது கட்டாயமானதாக இல்லாத போது நிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறது. | கணக்குகள் இரட்டைப்பதிவு முறையில் பராமரிக்கப்படும் போது இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கப்படுகிறது. |
| 3. | தயாரிப்பின் அடிப்படை | இது முழுமையாக பேரேட்டுக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. பேரேட்டுக் கணக்குகளின் இருப்புகள் முடிந்த இடங்களில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. | இது முழுமையாக பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகிறது. |
| 4. | நம்பகத்தன்மை | இது முழுமை பெறா பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் நம்பகத்தன்மை உடையது அல்ல. | இது இரட்டைப்பதிவு முறையில் தயாரிக்கப்படுவதால் நம்பகத்தன்மை உடையது. |
| 5. | விடுபட்ட விவரங்கள் | ஏடுகள் முழுமையாக பராமரிக்கப்படாததால் விடுபட்ட விவரங்களைக் கண்டறிவது கடினம். | அனைத்து நடவடிக்கைகளின் இரண்டு தன்மைகளும் பதியப்படுவதால் விடுபட்ட விவரங்களை எளிதில் கண்டறிய முடியும். |





orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**6. முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கடன் விற்பனைத் தொகை எவ்வாறு கண்டறியப்படுகிறது?**

விடை. ரொக்க விற்பனையுடன் கடன் விற்பனையைக் கூட்டி நாம் மொத்த விற்பனையைப் பெறலாம். ரொக்க விற்பனை ரொக்க ஏட்டில் தரப்பட்டிருக்கும். மொத்தக் கடனாளிகள் கணக்கு தயாரிக்கப்பட்டு கடன் விற்பனை கணக்கிடப்படும் மொத்தக் கடனாளிகள் கணக்கின் மாதிரி படிவம் கீழே தரப்பட்டுள்ளது.

ப **மொத்தக் கடனாளிகள் கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | XXX | ரொக்கம் பெற்றது | XXX |
| கடன் விற்பனை (இருப்பு கட்டும் தொகை) | XXX | தள்ளுபடி அளித்தது | XXX |
| | | விற்பனைத் திருப்பம் | XXX |
| | | இருப்பு கீ/இ (இறுதி இருப்பு) | XXX |
| | XXX | | XXX |

**IV. பயிற்சி வினாக்கள் :**

**1. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.** *[PTA-1, 6]*

| விவரம் | ₹ |
|---|---|
| ஆண்டின் தொடக்க முதல் (ஏப்ரல் 1, 2018) | 5,00,000 |
| ஆண்டின் இறுதி முதல் (மார்ச் 31, 2019) | 8,50,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 1,20,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 70,000 |

**தீர்வு :**

**2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| இறுதி முதல் (மார்ச் 31, 2019) | 8,50,000 |
| **கூட்டுக :** அவ்வாண்டில் எடுப்புகள் | 70,000 |
| | 9,20,000 |
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 1,20,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் | 8,00,000 |
| **கழிக்க :** தொடக்க முதல் (ஏப்ரல் 1, 2018) | 5,00,000 |
| அவ்வாண்டின் இலாபம் | **3,00,000** |

**2. பின்வரும் தகவல்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.** *[PTA-2; Sep-2020]*

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 2,20,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று முதல் | 1,80,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 40,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 50,000 |

**தீர்வு :**

**2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபநட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| இறுதி முதல் (2018, டிசம்பர் 31) | 1,80,000 |
| **கூட்டுக :** அவ்வாண்டில் எடுப்புகள் | 50,000 |
| | 2,30,000 |
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 40,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் | 1,90,000 |
| **கழிக்க :** தொடக்க முதல் (2018, ஜனவரி 1) | 2,20,000 |
| அவ்வாண்டில் ஏற்பட்ட நட்டம் | **30,000** |

**3. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.**

| விவரம் | ₹ |
|---|---|
| 31.3.2018 அன்று இறுதி முதல் | 80,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 30,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 15,000 |
| 01.4.2017 அன்று தொடக்க முதல் | ? |
| 31.3.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் நட்டம் | 25,000 |

**தீர்வு :**

**2018, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாபநட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| இறுதி முதல் (31-3-2018) | 80,000 |
| **கூட்டுக :** அவ்வாண்டில் எடுப்புகள் | 15,000 |
| | 95,000 |



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000
www.surabooks.com

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# அலகு 2 இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்குகள்

## பொருளடக்கம்


2.1 அறிமுகம்

2.2 இலாப நோக்கற்ற அமைப்புகளின் இயல்புகள்

2.3 பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

2.3.1 பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கை தயாரிப்பதற்கான படிநிலைகள்

2.4 இலாப நோக்கற்ற அமைப்புகளுக்குரிய தனித்துவம் வாய்ந்த இனங்கள்

2.5 வருவாய் மற்றும் செலவினக் கணக்கு

2.5.1 பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிப்பதற்கான படிநிலைகள்

2.5.2 வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் படிவம்

2.5.3 பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும் வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் இடையேயான வேறுபாடுகள்

2.5.4 வருவாயின வரவுகளுக்கான செயல்முறைகள்

2.6 இருப்புநிலைக் குறிப்பு




orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



# சுய ஆய்வு வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :**

**1. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு** *[PTA-5; Sep-2020; Aug-'21; FRT-'22]*

(அ) பெயரளவு கணக்கு (ஆ) சொத்து கணக்கு
(இ) ஆள்சார் கணக்கு
(ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

**[விடை. (ஆ) சொத்து கணக்கு]**

**2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் பதிவு செய்யப்படும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்** *[PTA-4]*

(அ) வருவாயினத் தன்மை மட்டும் உடையது
(ஆ) முதலினத் தன்மை மட்டும் உடையது
(இ) வருவாயினம் மற்றும் முதலினத் தன்மை உடையது
(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

**[விடை. (இ) வருவாயினம் மற்றும் முதலினத் தன்மை உடையது]**

**3. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் இருப்பு காட்டுவது** *[PTA-3; July-'22]*

(அ) அந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டம்
(ஆ) அந்த ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம்
(இ) அந்த ஆண்டின் மொத்த ரொக்கச் செலுத்தல்கள்
(ஈ) அந்நாளைய ரொக்க மற்றும் வங்கி இருப்பு

**[விடை. (ஈ) அந்நாளைய ரொக்க மற்றும் வங்கி இருப்பு]**

**4. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு** *[PTA-2; Mar-2020; FRT-'22]*

(அ) பெயரளவுக் கணக்கு
(ஆ) சொத்து கணக்கு (இ) ஆள்சார் கணக்கு
(ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

**[விடை. (அ) பெயரளவுக் கணக்கு]**

**5. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது** *[PTA-1; QY-'19; Aug-'21; FRT & May-'22]*

(அ) இலாபம் அல்லது நட்டம்
(ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
(இ) உபரி அல்லது பற்றாக்குறை
(ஈ) நிதிநிலை

**[விடை. (இ) உபரி அல்லது பற்றாக்குறை]**

**6. பின்வருவனவற்றில் எது வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை?** *[Govt. MQP-'19; PTA-1, 6; HY-'19; FRT-'22]*

(அ) பழைய செய்தித்தாள்கள் விற்றது
(ஆ) சொத்து விற்பனை மீதான நட்டம்
(இ) செயலாளருக்கு வழங்கிய மதிப்பூதியம்
(ஈ) அறைகலன் விற்ற தொகை

**[விடை. (ஈ) அறைகலன் விற்ற தொகை]**

**7. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது** *[PTA-2; HY-'19]*

(அ) ஒரு சொத்து (ஆ) ஒரு பொறுப்பு
(இ) ஒரு செலவு
(ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று

**[விடை. (அ) ஒரு சொத்து]**

**8. உயில்கொடை ஒரு** *[QY-'19; FRT & July -'22]*

(அ) வருவாயினச் செலவு
(ஆ) முதலினச் செலவு
(இ) வருவாயின வரவு
(ஈ) முதலின வரவு **[விடை. (ஈ) முதலின வரவு]**

**9. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை** *[PTA-4; Sep-2020; May-'22]*

(அ) வருவாயின வரவு (ஆ) முதலின வரவு
(இ) வருவாயினச் செலவு (ஈ) முதலினச் செலவு

**[விடை. (ஆ) முதலின வரவு]**

**10. ஒரு மன்றத்தில் உள்ள 500 உறுப்பினர்கள், ஆண்டு சந்தாவாக ₹100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ₹200; முன்கூட்டிப் பெற்ற சந்தா ₹300. வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினைக் கண்டறியவும்.** *[PTA-5; QY-'19; Mar-2020]*

(அ) ₹50,000 (ஆ) ₹50,200
(இ) ₹49,900 (ஈ) ₹49,800

**[விடை. (அ) ₹50,000]**

**II. மிகக் குறுகிய வினாக்கள் :**

**1. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தரவும்.** *[PTA-1; Aug-'21; FRT-'22]*

விடை. (i) சில அமைப்புகள் இலாபம் ஈட்டும் நோக்கத்திற்காக அல்லாமல் பொதுமக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்திற்காகவும் தொடங்கப்படுகின்றன. அவை கலை, பண்பாடு, கல்வி மற்றும் விளையாட்டு போன்றவற்றை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்படுகின்றன. இந்த அமைப்புகள் இலாப நோக்கற்ற அமைப்புகள் என்று அழைக்கப்படுகின்றன.



www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



(ii) அறக்கொடை நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், பண்பாட்டு மன்றங்கள், விளையாட்டு மற்றும் மனமகிழ் மன்றங்கள், மருத்துவமனைகள், நூலகங்கள் மற்றும் இலக்கிய அமைப்புகள் போன்றவை இலாப நோக்கற்ற அமைப்புகளுக்கு உதாரணங்கள் ஆகும்.

**2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்றால் என்ன?** *[PTA-2]*

விடை. (i) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்பது ஒரு இலாப நோக்கற்ற அமைப்பில் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் ரொக்கம் மற்றும் வங்கி நடவடிக்கைகளின் தொகுப்பு ஆகும்.

(ii) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு, தொடக்க ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு தொடங்கப்பட்டு இறுதி ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு முடிவடைகிறது.

**3. உயில்கொடை என்றால் என்ன?** *[PTA-3; May-'22]*

விடை. ஒரு இலாப நோக்கற்ற அமைப்புக்கு உயில் மூலமாக அளிக்கப்படும் பரிசு உயில்கொடை ஆகும். இது ஒரு முதலின வரவாகும்.

**4. ஆயுள் உறுப்பினர் கட்டணம் – சிறு குறிப்பு தரவும்.** *[PTA-4; Sep-2020; FRT-'22]*

விடை. உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஆயுள் உறுப்பினர் கட்டணம் ஒரு முதலின வரவாகும். ஏனெனில், இது திரும்பத் திரும்ப நிகழாத் தன்மை கொண்டது.

**5. இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.** *[Govt. MQP-'19; PTA-5; QY-'19; Mar-2020; FRT & July-'22]*

விடை. 1. ஆயுள் உறுப்பினர் கட்டணம்
2. உயில்கொடை
3. அறக்கட்டளை நிதி
4. முதலீடுகள் விற்ற தொகை

**6. இலாப நோக்கற்ற அமைப்பின் வருவாயின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.**

விடை. 1. நுழைவுக்கட்டணம்
2. பொது நன்கொடைகள்
3. பங்காதாயம்
4. வாடகைப் பெற்றது

## III. குறுகிய வினாக்கள் :

**1. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?** *[PTA-6]*

விடை. (i) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்பது இலாப நோக்கற்ற அமைப்புகளில் கணக்காண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் வருவாய் மற்றும் செலவுகளின் தொகுப்பாகும். ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்குரிய உபரி அல்லது பற்றாக்குறையை கண்டறிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுகிறது.

(ii) இது ஒரு பெயரளவு கணக்கு ஆகும். இது இலாப நட்டக் கணக்கு தயாரிப்பது போன்றதாகும். இந்த கணக்கில் வருமானங்கள் வரவுப் பக்கத்திலும், செலவுகள் பற்றுப்பக்கத்திலும் காண்பிக்கப்படும்.

(iii) ரொக்க நடவடிக்கைகள் மட்டுமின்றி ரொக்கம் சாரா நடவடிக்கைகளான ஈட்டிய வருமானம் பெறப்படாதது, நிலைச் சொத்து விற்பனை மீதான நட்டம் அல்லது இலாபம், தேய்மானம் போன்றவைகளும் இதில் பதிவு செய்யப்படுகின்றன.

**2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.** *[PTA-2; Sep-2020; FRT & July-'22]*

விடை.

| வ. எண். | அடிப்படை | பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு | வருவாய் மற்றும் செலவினக் கணக்கு |
|---|---|---|---|
| 1. | நோக்கம் | இது ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்களை அறிவதற்கு தயாரிக்கப்படுகிறது. | இது நடப்பு ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம் (உபரி) அல்லது வருமானத்தைக் காட்டிலும் மிகுதியான செலவுகள் (பற்றாக்குறை) குறித்து அறிந்துகொள்ள தயாரிக்கப்படுகிறது. |
| 2. | கணக்கின் தன்மை | இது ஒரு சொத்துக் கணக்காகும். இது ரொக்கக் கணக்கின் தொகுப்பாகும். அனைத்து ரொக்கப் பெறுதல்கள் பற்றுப் பக்கத்திலும், ரொக்கச் செலுத்தல்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன. | இது ஒரு பெயரளவுக் கணக்காகும். இது இலாப நட்டக் கணக்கைப் போன்றது. செலவுகள் பற்றுப்பக்கத்திலும் மற்றும் வருமானங்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன. |



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



| | | | |
|---|---|---|---|
| 3. | கணக்கியலின் அடிப்படை | இது ரொக்க அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது. ரொக்கம் சார்பற்ற விவரங்கள் பதியப்படுவதில்லை. | இது நிகழ்வு அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது. ரொக்கம் சாரா விவரங்களான கொடுபட வேண்டிய செலவுகள், தேய்மானம் போன்றவைகளும் இங்கு பதியப்படும். |
| 4. | தொடக்க மற்றும் இறுதி இருப்பு | இது ரொக்கம் மற்றும் வங்கிக் கணக்கின் தொடக்க இருப்புடன் தொடங்கி, ரொக்கம் மற்றும் வங்கிக் கணக்கின் இறுதி இருப்புடன் முடிவடைகிறது. | இங்கு தொடக்க இருப்பு என்பது கிடையாது. இது உபரி அல்லது பற்றாக்குறையுடன் முடிவடைகிறது. |
| 5. | நடவடிக்கையின் தன்மைகள் | இது வருவாயினம் அல்லது முதலினம் என்ற வேறுபாடில்லாமல் அனைத்துப் பெறுதல்கள் மற்றம் செலுத்தல்களைக் கொண்டிருக்கும் | இது வருவாயின நடவடிக்கைகளை மட்டுமே, அதாவது வருவாயினச் செலவுகள் மற்றும் வருவாயின வரவுகளை மட்டுமே கொண்டிருக்கும். |

**3. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதிக் கணக்குகளில் ஆண்டுச் சந்தா எவ்வாறு கையாளப்படுகிறது?** *[FRT-'22]*

விடை. இலாப நோக்கற்ற அமைப்புகளின் இறுதி கணக்குகளில் சந்தாவிற்கான செயல்முறைகள் :

**(அ) வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் செயல்முறைகள் :**

நடப்பு ஆண்டு, முந்தைய ஆண்டு, அடுத்த ஆண்டிற்கான சந்தா பெற்றது தனித்தனியாக கொடுக்கப்பட்டிருந்தால், நடப்பு ஆண்டிற்குரிய சந்தா கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்களை செய்த பின்பு வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காண்பிக்கப்பெறும்.

(i) நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா கூட்டப்படவேண்டும்.

(ii) முந்தைய ஆண்டில் முன்கூட்டிப்பெற்ற நடப்பாண்டிற்குரிய சந்தா கூட்டப்பட வேண்டும்.

நடப்பாண்டில் பெற்ற மொத்த சந்தா கொடுக்கப் பட்டிருந்தால், நடப்பாண்டில் பெற்ற மொத்த சந்தா பின்வரும் சரிக்கட்டுதல்களை செய்த பின்னர் வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காட்டப்பெறும்.

(i) முந்தைய ஆண்டுக்குரிய பெற வேண்டிய சந்தா நடப்பு ஆண்டில் பெறப்பட்டிருந்தால் கழிக்கப்பட வேண்டும். நடப்பாண்டிற்குரிய பெறவேண்டிய சந்தா கூட்டப்பட வேண்டும்.

(ii) முந்தைய ஆண்டில் முன்கூட்டிப்பெற்ற சந்தாவில் நடப்பாண்டிற்கு உரியது கூட்டப்பட வேண்டும். நடப்பாண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தாவில் எதிர்வரும் ஆண்டிற்குரியது கழிக்கப்பட வேண்டும்.

**(ஆ) இருப்புநிலைக் குறிப்பில் செயல்முறைகள்:**

(i) நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா மற்றும் இன்னும் பெற வேண்டிய முந்தைய ஆண்டிற்குரிய சந்தா போன்றவை அவ்வாண்டின் இறுதியில் இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கத்தில் காண்பிக்கப்படும்.

(ii) நடப்பு ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தா அவ்வாண்டின் இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பக்கத்தில் காண்பிக்கப்படும்.

**4. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதி கணக்குகளில் பின்வரும் விவரங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன?** *[PTA-4]*

**(அ) விளையாட்டுப் பொருள்கள் விற்பனை**

**(ஆ) ஆயுள் உறுப்பினர் கட்டணம்**

**(இ) தொடர் விளையாட்டுப் போட்டி நிதி**

விடை. **(அ) விளையாட்டுப் பொருள்கள் விற்பனை :**

(i) நடப்பாண்டில் பயன்படுத்தப்பட்ட விளையாட்டுச் சாதனங்கள் வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் பற்றுப் பக்கத்தில் காட்டப்பட வேண்டும்.

(ii) பயன்படுத்தப்பட்டவை = தொடக்க இருப்பு + நடப்பு ஆண்டில் வாங்கியது – இறுதி இருப்பு

(iii) இறுதி சரக்கிருப்பு அவ்வாண்டின் இறுதியில் இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்தில் தோன்றும்.



www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(iv) பழைய விளையாட்டுச் சாதனங்கள் ஏதேனும் விற்பனைச் செய்யப்பட்டிருந்தால் அவை வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப்பக்கத்தில் காட்டப்பட வேண்டும் அல்லது வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் பற்றுப்பக்கத்தில் குறிப்பிட்ட பயன்படுத்தப்பட்ட பொருள்களில் கழித்துக் காட்டப்பட வேண்டும்.

**(ஆ) ஆயுள் உறுப்பினர் கட்டணம் :** உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஆயுள் உறுப்பினர் கட்டணம் ஒரு முதலின வரவாகும்.

**(இ) தொடர் விளையாட்டுப் போட்டி நிதி :** தொடர் விளையாட்டுப் போட்டி நிதி இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம் தனியாக காண்பிக்கப்பட வேண்டும். நிதிக்கான வருமானம் ஏதாவது இருந்தால் அவை நிதிக் கணக்குடன் கூட்டப்பட வேண்டும் மற்றும் நிதித் தொடர்பான செலவுகள் இருப்புநிலைக் குறிப்பில் நிதிக் கணக்கிலிருந்து கழிக்கப்பட வேண்டும்.

## IV. பயிற்சி வினாக்கள் :

**1. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் 2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.** *[Govt. MQP-'19; PTA-1, 6]*

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கைரொக்கம் (1.1.2018) | 4,000 | அச்சுக்கட்டணம் செலுத்தியது | 2,500 |
| சம்பளம் கொடுத்தது | 3.000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 1,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | | தொடர் விளையாட்டுப் போட்டி வரவுகள் | 14,000 |
| பெற்றது | 10,000 | | |
| சந்தா பெற்றது | 15,000 | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 10,500 |
| வாடகை பெற்றது | 2,000 | முதலீடுகள் வாங்கியது | 25,000 |

**தீர்வு :**

**குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் ஏடுகளில் 2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு**

ப வ

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | சம்பளம் | 3,000 |
| கைரொக்கம் | 4,000 | அச்சுக்கட்டணம் | 2,500 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது | 10,000 | தொடர் விளையாட்டுப் போட்டிச் | |
| | | செலவுகள் | 10,500 |
| சந்தா பெற்றது | 15,000 | முதலீடுகள் வாங்கியது | 25,000 |
| வாடகை பெற்றது | 2,000 | இருப்பு கீ/இ | |
| பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 1,000 | கைரொக்கம் | **5,000** |
| தொடர் விளையாட்டுப் போட்டி வரவுகள் | 14,000 | | |
| | 46,000 | | 46,000 |

**2. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.** *[PTA-2, 6]*

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று (1.4.2018) | | 6,000 | மதிப்பூதியம் செலுத்தியது | 2,800 |
| கைரொக்கம் (1.4.2018) | | 1,000 | நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் | 700 |
| மைதான பராமரிப்பிற்காக கூலி | | | விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 2,600 |
| செலுத்தியது | | 2,000 | | |
| சந்தா பெற்றது : முந்தைய ஆண்டு | 500 | | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 1,900 |
| நடப்பு ஆண்டு | 9,600 | | விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள் | 5,200 |
| எதிர்வரும் ஆண்டு | 400 | 10,500 | உயில்கொடைப் பெற்றது | 2,000 |
| கூலி கொடுபட வேண்டியது | | 2,200 | ரொக்க இருப்பு (31.3.2019) | 300 |
| கடன்மீதான வட்டி செலுத்தியது | | 2,000 | அரங்கம் அமைப்பதற்காக பெற்ற | |
| | | | நன்கொடை | 2,000 |



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**தீர்வு :**

**கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் ஏடுகளில் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு**

ப வ

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | இருப்பு கீ/கொ | |
| கைரொக்கம் | | 1,000 | வங்கி மேல்வரைப்பற்று | 6,000 |
| சந்தா பெற்றது : | | | கூலி செலுத்தியது | 2,000 |
| முந்தைய ஆண்டு | 500 | | கடன் மீது வட்டி | 2,000 |
| நடப்பு ஆண்டு | 9,600 | | மதிப்பூதியம் | 2,800 |
| எதிர்வரும் ஆண்டு | 400 | 10,500 | நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் | 700 |
| விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள் | | 5,200 | விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 2,600 |
| உயில் கொடை | | 2,000 | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 1,900 |
| அரங்கம் நன்கொடை | | 2,000 | இருப்பு கீ/இ | |
| | | | ரொக்க இருப்பு | 300 |
| | | | வங்கி இருப்பு | 2,400 |
| | | 20,700 | | 20,700 |

[**குறிப்பு :** செலுத்த வேண்டிய கூலி என்பது ரொக்கம் சாரா நடவடிக்கை ஆகையால் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் வருவதில்லை.]

3. **கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து மதுரை அன்னை தெரசா மகளிர் மன்றத்தின் 2018, டிசம்பர், 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.** *[PTA-3]*

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு (1.1.2018) | 2,000 | தீக்காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 1,500 |
| வங்கி இருப்பு (1.1.2018) | 3,000 | சந்தா பெற்றது | 8,500 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | 500 | அறைகலன் வாங்கியது | 6,000 |
| எழுதுபொருள்கள் வாங்கியது | 6,000 | செய்தித்தாள்கள் வாங்கியது | 700 |
| தணிக்கைக் கட்டணம் செலுத்தியது | 2,000 | அறைகலன் மீதான தேய்மானம் | 900 |
| நுழைவுக்கட்டணம் பெற்றது | 3,000 | ரொக்க இருப்பு (31.12.2018) | 2,500 |
| பல்வகைச் செலவுகள் | 6,000 | போக்குவரத்துச் செலவுகள் | 1,000 |
| உதவித்தொகை அளித்தது | 2,000 | அறைகலன் விற்றது | 4,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 2,000 | | |

**தீர்வு :**

**மதுரை அன்னை தெரசா மகளிர் மன்றத்தின் ஏடுகளில் 2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு**

ப வ

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | எழுது பொருள்கள் வாங்கியது | 6,000 |
| ரொக்க இருப்பு | 2,000 | | தணிக்கைக் கட்டணம் | 2,000 |
| வங்கி இருப்பு | 3,000 | 5,000 | பல்வகைச் செலவுகள் | 6,000 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | | 500 | உதவித்தொகை அளித்தது | 2,000 |
| நுழைவுக் கட்டணம் பெற்றது | | 3,000 | தீக்காப்பீட்டு முனைமம் | 1,500 |
| முதலீடுகள் மீதான வட்டி | | 2,000 | அறைகலன் வாங்கியது | 6,000 |
| சந்தா பெற்றது | | 8,500 | செய்தித்தாள்கள் வாங்கியது | 700 |
| அறைகலன் விற்றது | | 4,000 | போக்குவரத்துச் செலவுகள் | 1,000 |
| இருப்பு கீ/இ | | | இருப்பு கீ/இ | |
| வங்கி மேல்வரைப்பற்று | | 4,700 | ரொக்க இருப்பு | 2,500 |
| | | 27,700 | | 27,700 |

[**குறிப்பு :** அறைகலன் மீதான தேய்மானம் ரொக்கம் சாரா நடவடிக்கையாக இருப்பதால் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் வருவதில்லை.]





orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# அலகு 3

# கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள் – அடிப்படைகள்

www.surabooks.com

## பொருளடக்கம்


**3.1** அறிமுகம்

**3.2** கூட்டாண்மையின் பொருள், வரைவிலக்கணம் மற்றும் சிறப்பியல்புகள்

**3.2.1** கூட்டாண்மையின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்

**3.2.2** கூட்டாண்மையின் சிறப்பியல்புகள்

**3.3** கூட்டாண்மை ஒப்பாவணம்

**3.3.1** கூட்டாண்மை ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்கள்

**3.4** கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932ன் படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளின் பயன்பாடு.

**3.5** கூட்டாண்மை நிறுவனத்தின் இறுதிக் கணக்குகள்

**3.6** கூட்டாளிகளின் முதல் கணக்குகளைத் தயாரிக்கும் முறைகள்

**3.6.1** நிலைமுதல் முறை

**3.6.2** மாறுபடும் முதல் முறை

**3.6.3** நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகள்

**3.7** கூட்டாளிகளின் முதல் மீது வட்டி மற்றும் எடுப்புகள் மீது வட்டி கணக்கிடுதல்

**3.7.1** முதல் மீது வட்டி

**3.7.2** முதல் மீதான வட்டி கணக்கிடுதல்

**3.7.3** எடுப்புகள் மீது வட்டி

**3.7.4** எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடுதல்

**3.8** கூட்டாளிகளின் ஊதியம் மற்றும் கழிவு

**3.9** கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன்மீதான வட்டி

**3.10** கூட்டாளிகளுக்கிடையேயான இலாபப் பகிர்வு

**3.11** இலாபநட்டப் பகிர்வு கணக்கு

**3.11.1** இலாபநட்டப் பகிர்வு கணக்கின் படிவம்




orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



# சுய ஆய்வு வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :**

**1. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது.** *[PTA-5; QY-'19; FRT & May-'22]*

(அ) சமமான விகிதத்தில்
(ஆ) முதல் விகிதத்தில்
(இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ)
(ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

**[விடை. (அ) சமமான விகிதத்தில்]**

**2. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது முதல் மீது வட்டி** *[Govt. MQP-'19; PTA-4; Mar-2020; FRT-'22]*

(அ) வழங்கப்படுவதில்லை
(ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்
(இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும்
(ஈ) ஆண்டுக்கும் 6% வழங்கப்படும்

**[விடை. (அ) வழங்கப்படுவதில்லை]**

**3. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932-ன் படி வழங்கப்படும் வட்டி வீதம்.** *[PTA-3; Aug-'21; July -'22]*

(அ) ஆண்டுக்கு 8% (ஆ) ஆண்டுக்கு 12%
(இ) ஆண்டுக்கு 5% (ஈ) ஆண்டுக்கு 6%

**[விடை. (ஈ) ஆண்டுக்கு 6%]**

**4. பின்வருவனவற்றில் எது இலாபநட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும்?** *[PTA-2; QY-'19; Sep-2020]*

(அ) அலுவலகச் செலவுகள்
(ஆ) பணியாளர் ஊதியம்
(இ) கூட்டாளியின் ஊதியம்
(ஈ) வங்கிக்கடன் மீதான வட்டி

**[விடை. (இ) கூட்டாளியின் ஊதியம்]**

**5. கூட்டாண்மை நிறுவனத்தில் நிலைமுதல் முறை பின்பற்றப்படும்போது, பின்வருவனவற்றுள் எது முதல் கணக்கில் காட்டப்படும்?** *[PTA-1]*

(அ) கூடுதல் முதல் கொண்டுவந்தது
(ஆ) முதல் மீது வட்டி
(இ) எடுப்புகள் மீது வட்டி
(ஈ) இலாபப் பகிர்வு

**[விடை. (அ) கூடுதல் முதல் கொண்டுவந்தது]**

**6. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும்போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக** *[PTA-1, 6; HY-'19; FRT & July -'22]*

(அ) 5.5 மாதங்கள் (ஆ) 6 மாதங்கள்
(இ) 12 மாதங்கள் (ஈ) 6.5 மாதங்கள்

**[விடை. (ஆ) 6 மாதங்கள்]**

**7. பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?** *[Govt. MQP-'19; PTA-2, 6; QY-'19; Sep-2020]*

(அ) எடுப்புகள் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
(ஆ) முதல் மீது வட்டி - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்
(இ) கடன்மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
(ஈ) இலாபப் பகிர்வு - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்

**[விடை. (இ) கடன்மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்]**

**8. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது.** *[PTA-3]*

(அ) சம்பளம் (ஆ) கழிவு
(இ) கடன் மீது வட்டி (ஈ) முதல் மீது வட்டி

**[விடை. (இ) கடன் மீது வட்டி]**

**9. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.** *[PTA-4]*

(அ) கூட்டாளிகள் இலாபம் மற்றும் நட்டத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
(ஆ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்.
(இ) கூட்டாளிகளுக்கு சம்பளம் அல்லது ஊதியம் அனுமதிக்கப்பட மாட்டாது.
(ஈ) கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்.

**[விடை. (ஆ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்]**



www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**தீர்வு :**

பெருக்குத் தொகை முறையில் எடுப்புகள் மீது வட்டி கணக்கிடுதல்.

| எடுப்பு நாள் | எடுப்புத் தொகை ₹ | வட்டிக்குரிய காலம் டிசம்பர் 31 வரை (மாதங்களில்) | பெருக்குத் தொகை ₹ |
|---|---|---|---|
| மார்ச் 1 | 8,000 | 10 | 80,000 |
| ஜுன் 1 | 6,000 | 7 | 42,000 |
| செப்டம்பர் 1 | 4,000 | 4 | 16,000 |
| டிசம்பர் 1 | 3,000 | 1 | 3,000 |
| மொத்த பெருக்குத் தொகை | | | 1,41,000 |

எடுப்புகள் மீதான வட்டி = மொத்த பெருக்குத் தொகை × ஆண்டு வட்டி வீதம் × $\frac{1}{12}$

= 1,41,000 × $\frac{12}{100}$ × $\frac{1}{12}$ = 1,410

**3. நிலா மற்றும் மாதுரி இருவரும் கூட்டாளிகள். நிலா ஒவ்வொரு அரையாண்டின் தொடக்கத்திலும் ₹5,000 எடுத்துக்கொண்டார். கணக்கிடப்பட வேண்டிய எடுப்புகள் மீதான வட்டி ஆண்டுக்கு 4%. 2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி, சராசரி கால முறையைப் பயன்படுத்திக் கணக்கிடவும்.**

**தீர்வு :**

நிலாவின் எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடுதல் (சராசரி கால முறையை பயன்படுத்தி)

மொத்த எடுப்புத் தொகை = 5,000 × 2 = ₹10.000

எடுப்புகள் ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் எடுத்திருந்தால், சராசரி காலம் = 9

எடுப்புகள் மீது வட்டி = மொத்த எடுப்புத் தொகை × வட்டி வீதம் × $\frac{\text{சராசரி காலம்}}{12}$

= ₹10,000 × $\frac{4}{100}$ × $\frac{9}{12}$ = ₹300

## III. குறுகிய வினாக்கள் : 3 மதிப்பெண்கள்

**1. கூட்டாளிகளின் முதல் கணக்குகளைத் தயாரிக்கும் முறைகளை எழுதுக.**

விடை. கூட்டாளிகள், கூட்டாண்மை நிறுவனத்தில் முதலீடு செய்யும் தொகை கூட்டாளிகளின் முதல் எனப்படுகிறது. ஒரு நிறுவனத்திலுள்ள கூட்டாளிகளின் முதல் கணக்குகளைப் பின்வரும் ஏதேனும் இரு முறைகளில் பராமரிக்கலாம்.

(i) நிலைமுதல் முறை மற்றும் (ii) மாறுபடும் முதல் முறை

**(i) நிலைமுதல் முறை :**

நிலைமுதல் முறையில், கூட்டாளிகளின் முதல் மாறாமல் இருக்கும் மற்றும் பொதுவாக அதே தொகையாக, நிலையானதாக இருக்கும். ஒவ்வொரு கூட்டாளிக்கும் இரண்டு கணக்குகள் பராமரிக்கப்பட வேண்டும். அதாவது, (அ) முதல் கணக்கு மற்றும் (ஆ) நடப்புக் கணக்கு, தொடக்க முதல் கொண்டு வந்தது, கூடுதல் முதல் கொண்டு வந்தது மற்றும் முதல் நிரந்தரமாக திரும்ப எடுத்தது போன்றவை தொடர்பான நடவடிக்கைகள் முதல் கணக்கில் பதிவு செய்யப்படுகின்றன. மற்ற அனைத்து நடவடிக்கைகளும் நடப்புக் கணக்கில் பதிவு செய்யப்படுகின்றன.

**(ii) மாறுபடும் முதல் முறை :**

இம்முறையில், ஒவ்வொரு கூட்டாளிக்கும் முதல் கணக்கு மட்டும் பராமரிக்கப்படுகிறது. கூட்டாளி மற்றும் நிறுவனத்திற்கு இடையேயுள்ள அனைத்து நடவடிக்கைகளும் முதல் கணக்கில் பதியப்படுகின்றன. கூட்டாளியால் கொண்டு வரப்பட்ட தொடக்க முதல் மற்றும் கூடுதல் முதல், முதல் மீது வட்டி, கூட்டாளியின் ஊதியம், கழிவு மற்றும் கூட்டாளியின் இலாபப் பங்கு போன்றவை இக்கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. முதல் திரும்ப எடுத்தது, எடுப்புகள், எடுப்புகள் மீது வட்டி மற்றும் கூட்டாளிக்குரிய நட்டப்பங்கு போன்றவை இக்கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன.



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000
www.surabooks.com

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**2. குறிப்பு வரைக :**

**(i) கூட்டாளிகளின் முதல் கணக்கு** **(ii) கூட்டாளிகளின் நடப்பு கணக்கு**

விடை. **(i) கூட்டாளிகளின் முதல் கணக்கு :**

(1) நிறுவனத்திற்கு கூட்டாளியால் கொண்டு வரப்பட்ட தொடக்க முதல் மற்றும் அவரால் எதிர் வரும் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட ஏதேனும் கூடுதல் முதல் போன்றவை முதல் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன.

(2) ஒரு கூட்டாளியால் நிரந்தரமாக நிறுவனத்திலிருந்து முதல் தொகை திரும்ப எடுக்கப்பட்டிருந்தால் அது முதல் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது.

**(ii) கூட்டாளிகளின் நடப்புக் கணக்கு :**

(1) கூட்டாளிகளால் கொண்டுவரப்பட்ட தொடக்க முதல், கூடுதல் முதல் மற்றும் அவர்களால் நிரந்தரமாக திரும்ப எடுக்கப்பட்ட முதல் தவிர, கூட்டாளிகளுக்கும் நிறுவனத்திற்கும் இடையே உள்ள அனைத்து பிற நடவடிக்கைகளைப் பதிவு செய்வதற்காக கூட்டாளிகளின் நடப்புக் கணக்கு தயாரிக்கப்படுகிறது.

(2) முதல் மீது வட்டி, கூட்டாளிகளின் ஊதியம் அல்லது கழிவு மற்றும் கூட்டாளிக்குரிய இலாபப் பங்கு போன்றவை இக்கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன.

(3) எடுப்புகள், எடுப்புகள் மீது வட்டி மற்றும் கூட்டாளியின் நட்டப் பங்கு போன்றவை இக்கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன.

**3. முதல் மீதான வட்டி எவ்வாறு கணக்கிடப்படுகிறது?**

விடை. (i) முதல் மீது வட்டி நடப்பாண்டுக்குரிய தொடக்க முதலில் கணக்கிடப்படுகிறது.

(ii) அவ்வாண்டில் கூட்டாளிகள் கூடுதல் முதல் ஏதாவது கொண்டு வந்திருந்தாலோ, அல்லது முதல் தொகையை நிரந்தரமாக திரும்ப எடுத்திருந்தாலோ, அது முதல் தொகையில் மாற்றத்தை உண்டாக்கும்.

(iii) எனவே, நடப்பாண்டுக்குரிய வட்டியானது முதல் தொகையில் ஏற்பட்ட மாற்றங்களின் விகிதாச்சாரத்திற்கேற்ப கணக்கிடப்படுதல் வேண்டும்.

(iv) **முதல் மீது வட்டி = முதல் தொகை × ஆண்டுக்கான வட்டி விகிதம் × வட்டிக்குரிய காலம்.**

**4. எடுப்புகள் மீதான வட்டியை கணக்கிடும் முறைகளை எழுதுக.**

விடை. எடுப்புகள் மீதான வட்டி நேரடி முறை அல்லது பெருக்குத்தொகை முறை இவைகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் கணக்கிடப்படுகிறது.

**(i) நேரடி முறை :**

இம்முறையில் எடுப்பு மீதான வட்டி, எடுப்புகள் எடுத்த நாளிலிருந்து கணக்காண்டின் இறுதி நாள் வரையிலான காலத்திற்குரிய எடுப்புகள் மீது கணக்கிடப்படுகிறது. எடுப்புகள் மீதான வட்டி கணக்கிட பின்வரும் சூத்திரம் பயன்படுத்தப்படுகிறது.

**எடுப்புகள் மீதான வட்டி = எடுப்புத் தொகை × வட்டி வீதம் × வட்டிக்குரிய காலம்.**

**(ii) பெருக்குத் தொகை முறை :**

பெருக்குத் தொகை முறையில், மொத்தப் பெருக்குத் தொகையின் மீது வட்டி கணக்கிடப்படுகிறது. அதாவது, எடுப்புத் தொகை மற்றும் எடுப்புத் தொகை பயன்படுத்தப்பட்ட காலம் இவற்றைப் பெருக்குவதால் கிடைக்கும் தொகை ஆகும். பெருக்குத்தொகை மாத அடிப்படையில் கணக்கிடப்படுவதாக இருந்தால், மொத்தப் பெருக்குத் தொகைக்கு, குறிப்பிட்ட வட்டி விகிதத்தில் ஒரு மாதத்திற்குரிய வட்டி கணக்கிடப்படுகிறது.

**(iii) சராசரி கால முறை :**

கூட்டாளிகள் ஒரு குறிப்பிட்ட தொகையை குறிப்பிட்ட கால இடைவெளியில் எடுத்தால், எடுப்புகள் மீது வட்டி, சராசரி கால அடிப்படையில் கணக்கிடப்படும். குறிப்பிட்ட கால இடைவெளி என்பது மாதந்தோறும், காலாண்டு தோறும், அரையாண்டு தோறும், 2 மாதங்களுக்கு ஒரு முறை மற்றும் 4 மாதங்களுக்கு ஒருமுறை தொகை எடுப்பதைக் குறிக்கிறது.



www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**கணக்குகள் :**

1. **முரளி மற்றும் சேது இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். முரளி, கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவாகப் பெற வேண்டும். சேது, கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவாகப் பெற வேண்டும். 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய கழிவு கணக்கிடுவதற்கு முன்னர் உள்ள நிகர இலாபம் ₹2,20,000 முரளி மற்றும் சேதுவிற்கு தரவேண்டிய கழிவினைக் கண்டுபிடிக்கவும்.**

**தீர்வு :** **கழிவு கணக்கிடுதல் :**

**முரளி :**

முரளிக்கு தரவேண்டிய கழிவு = கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபம் × $\frac{\text{கழிவு வீதம்}}{100}$

$= 2,20,000 \times \frac{10}{100} = ₹22,000$

**சேது :**

முரளியின் கழிவிற்கு பின் உள்ள நிகர இலாபம் = 2,20,000 – 22,000 = ₹1,98,000

சேதுவிற்கு தரவேண்டிய கழிவு = கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபம் × $\frac{\text{கழிவு வீதம்}}{100 + \text{கழிவு வீதம்}}$

$= 1,98,000 \times \frac{10}{(100 + 10)} = ₹18,000$

2. **மாலு மற்றும் நீது, 2018, ஜனவரி 1 அன்று முறையே ₹3,00,000 மற்றும் ₹2,00,000 முதலாகக் கொண்டு தொழில் தொடங்கினர்.**

**கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி,**

**(அ) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% தரப்பட வேண்டும்.**

**(ஆ) நீது ஆண்டுக்கு 50,000 ஊதியம் பெற வேண்டும்.**

**(இ) முதல் மீது வட்டி மற்றும் நீது ஊதியத்தை கழித்த பின், கழிவுக்குப் பின் உள்ள இலாபத்தில் 10% மாலு கழிவாகப் பெற வேண்டும்.**

**(ஈ) இரு கூட்டாளிகளுக்கு இடையேயான இலாபப் பகிர்வு விகிதம் 3:2**

**அவ்வாண்டில் நிறுவனம் ஈட்டிய இலாபம் ₹3,00,000.**

**நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் – 31இல் கணக்கு முடிக்கிறது எனக் கொண்டு இலாபநட்டப் பகிர்வு கணக்கை தயாரிக்கவும்.**

**தீர்வு :**

ப 2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபநட்டப் பகிர்வு கணக்கு வ

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் மீதான வட்டி க/கு : | | | இலாபநட்ட க/கு | 3,00,000 |
| மாலு (3,00,000 × 6%) | 18,000 | | | |
| நீது (2,00,000 × 6%) | 12,000 | 30,000 | | |
| நீது ஊதிய க/கு | | 50,000 | | |
| மாலு கழிவு க/கு | | 20,000 | | |
| கூட்டாளிகளின் முதல் க/கு : (இலாபம்) | | | | |
| மாலு (3/5) | 1,20,000 | | | |
| நீது (2/5) | 80,000 | 2,00,000 | | |
| | | 3,00,000 | | 3,00,000 |

குறிப்பு : **கழிவு கணக்கிடுதல் :**

கழிவுக்கு முன் உள்ள இலாபம் = 3,00,000 – (50,000 + 30,000) = ₹2,20,000

கழிவு = கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபம் × $\frac{\text{கழிவு வீதம்}}{100 + \text{கழிவு வீதம்}}$

கழிவு $= 2,20,000 \times \frac{10}{110} = ₹20,000$



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**IV. கணக்குகள் :** **5 மதிப்பெண்கள்**

1. **பின்வரும் தகவல்களிலிருந்து சாந்தினி மற்றும் சுமதி என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல், நிலை முதலாக இருக்கும் போது தயாரிக்கவும்.**

| விவரம் | சாந்தினி ₹ | சுமதி ₹ |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 2,00,000 | 1,80,000 |
| 2018, ஜனவரி 1 அன்று நடப்புக் கணக்கு (வ) | 15,000 | 13,000 |
| 2018, ஜுன் 1 கூடுதல் முதல் கொண்டு வந்தது | 20,000 | 18,000 |
| 2018 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 40,000 | 18,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 1,500 | 1,300 |
| 2018-ல் இலாபப் பங்கு | 20,000 | 18,000 |
| முதல் மீது வட்டி | 9,300 | 7,400 |
| ஊதியம் | 9,000 | |
| கழிவு | | 2,200 |

**தீர்வு :**

ப **கூட்டாளிகளின் முதல் கணக்கு** வ

| நாள் | விவரம் | சாந்தினி ₹ | சுமதி ₹ | நாள் | விவரம் | சாந்தினி ₹ | சுமதி ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| 2018 டிச. 31 | இருப்பு கீ/இ | **2,20,000** | **1,98,000** | 2018 ஜன. 1 | இருப்பு கீ/கொ | 2,00,000 | 1,80,000 |
| | | | | ஜுன் 1 | வங்கி (கூடுதல் முதல்) | 20,000 | 18,000 |
| | | 2,20,000 | 1,98,000 | | | 2,20,000 | 1,98,000 |
| | | | | 2019 ஜன 1 | இருப்பு கீ/கொ | 2,20,000 | 1,98,000 |

ப **கூட்டாளிகளின் நடப்புக் கணக்கு** வ

| நாள் | விவரம் | சாந்தினி ₹ | சுமதி ₹ | நாள் | விவரம் | சாந்தினி ₹ | சுமதி ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| | எடுப்புகள் | 40,000 | 18,000 | | இருப்பு கீ/கொ | 15,000 | 13,000 |
| | எடுப்புகள் மீது வட்டி | 1,500 | 1,300 | | இலாப நட்டப் பகிர்வு கணக்கு (இலாபப் பங்கு) | 20,000 | 18,000 |
| | இருப்பு கீ/இ | **11,800** | **21,300** | | முதல் மீது வட்டி | 9,300 | 7,400 |
| | | | | | சம்பளம் | 9,000 | - |
| | | | | | கழிவு | - | 2,200 |
| | | 53,300 | 40,600 | | | 53,300 | 40,600 |
| | | | | | இருப்பு கீ/கொ | 11,800 | 21,300 |



www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# அலகு 4

# கூட்டாண்மை கணக்குகள் – நற்பெயர்

www.surabooks.com

## பொருளடக்கம்


4.1 அறிமுகம்

4.2 நற்பெயரின் தன்மை

4.3 ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள்

4.4 கூட்டாண்மை நிறுவனங்களின் நற்பெயரை மதிப்பீடு செய்வதற்கான தேவை

4.5 நற்பெயரின் வகைகள்

4.6 நற்பெயரை மதிப்பிடும் முறைகள்

- 4.6.1 சராசரி இலாப அடிப்படையில்
- 4.6.2 உயர் இலாப முறைகள்
- 4.6.3 மூலதனமாக்கல் முறை




orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



# சுய ஆய்வு வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :**

**1. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?** *[Govt. MQP-'19; PTA-1; QY-'19; SRT-'22]*

(அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து
(ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
(இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து
(ஈ) நற்பெயரினை வாங்க முடியாது

**[விடை. (அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து]**

**2. உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்.** *[PTA-2; Aug-'21; July-'22]*

(அ) பயன்படுத்தப்பட்ட முதல் மற்றும் சராசரி இலாபம்
(ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள்
(இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம்
(ஈ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம்

**[விடை. (இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம்]**

**3. ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாப விகிதமாக கருதப்படுவது** *[PTA-3; SRT-'22]*

(அ) சராசரி இலாபம்
(ஆ) சாதாரண இலாப விகிதம்
(இ) எதிர்நோக்கும் இலாப விகிதம்
(ஈ) இவைகளில் ஏதுமில்லை

**[விடை. (ஆ) சாதாரண இலாப விகிதம்]**

**4. கீழ்வருவனவற்றில் எது சரியானது?** *[PTA-4; QY-'19; May-'22]*

(அ) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
(ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
(இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்
(ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகள்

**[விடை. (இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்]**

**5. சரியற்ற இணையினை அடையாளம் காணவும்** *[PTA-1; Mar-2020; Aug-'21; SRT-'22]*

(அ) சராசரி இலாபமுறையில் நற்பெயர் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
(ஆ) உயர் இலாப முறையில் நற்பெயர் = உயர் இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
(இ) ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் × ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு
(ஈ) கூட்டு சராசரி இலாப முறையில் நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

**[விடை. (இ) ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் × ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு]**

**6. சராசரி இலாபம் ₹25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹15,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்.** *[PTA-2; QY-'19; Sep-2020; SRT-'22]*

(அ) ₹25,000 (ஆ) ₹5,000
(இ) ₹10,000 (ஈ) ₹15,000

**[விடை. (இ) ₹10,000]**

**குறிப்பு :**

உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

= 25,000 – 15,000 = ₹10,000

**7. 2017-ல் கணக்கேட்டின்படி இலாபம் ₹35,000; இலாபத்தில் சேர்ந்துள்ள திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹1,000 மற்றும் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதாரன நட்டம் ₹2,000 எனில், சரிக்கட்டப்பட்ட இலாபம்.** *[PTA-3]*

(அ) ₹36,000 (ஆ) ₹35,000
(இ) ₹38,000 (ஈ) ₹34,000

**[விடை. (அ) ₹36,000]**

**குறிப்பு :**

சரிக்கட்டப்பட்ட இலாபம் கணக்கிடுதல்

| விவரம் | 2017 ₹ |
|---|---|
| இலாபம் | 35,000 |
| **கழிக்க :** திரும்பத் திரும்ப நிகழா வருமானம் | 1,000 |
| | 34,000 |
| **கூட்டுக :** அசாதாரண நட்டம் | 2,000 |
| சரிக்கட்டப்பட்ட பின் இலாபம் | 36,000 |





orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



8. **ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ₹1,00,000; சொத்துகள் ₹1,50,000 மற்றும் பொறுப்புகள் ₹80,000. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு** *[PTA-4]*

(அ) ₹40,000 (ஆ) ₹70,000
(இ) ₹1,00,000 (ஈ) ₹30,000

**[விடை. (ஈ) ₹30,000]**

**குறிப்பு :**

நற்பெயர் = வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு – பயன்படுத்தப்பட்ட முதல்

பயன்படுத்தப்பட்ட முதல் = நடப்புச் சொத்துகள் – நடப்புப் பொறுப்புகள்
= ₹1,50,000 – ₹80,000
= ₹70,000

நற்பெயர் = ₹1,00,000 – ₹70,000
= ₹30,000

## II. மிகக் குறுகிய வினாக்கள் :

1. **நற்பெயர் என்றால் என்ன?** *[PTA-1]*

விடை. (i) ஒரு தொழிலுக்கு நன்மையை தரக்கூடிய அத்தொழிலின் புகழ் அல்லது நன்மதிப்பு நற்பெயர் ஆகும். இது அத்தொழிலுக்கு அதிக இலாபம் ஈட்ட உதவுகிறது.

(ii) இது எதிர்காலத்தில் நிறுவனம் மிகுதியாக ஈட்டக்கூடிய வருமானங்களின் தற்போதைய மதிப்பு ஆகும்.

2. **வாங்கப்பட்ட நற்பெயர் என்றால் என்ன?** *[PTA-2]*

விடை. நற்பெயரானது, ரொக்கம் அல்லது பொருளைச் செலுத்தி பெறப்பட்டிருந்தால் அது வாங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட நற்பெயர் என்றழைக்கப்படுகிறது.

3. **உயர் இலாபம் என்றால் என்ன?** *[SRT & May-'22]*

விடை. ஒரு வியாபாரத்தின் உயர் இலாபம் என்பது சாதாரண இலாபத்தை விட கூடுதலாக உள்ள சராசரி இலாபம் ஆகும்.

உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

4. **சாதாரண இலாப விகிதம் என்றால் என்ன?** *[PTA-4; July-'22]*

விடை. சாதாரண இலாப விகிதம் என்பது ஒரு தொழிலில் ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில் ஈட்டும் இலாப விகிதம் எனப்படும்.

5. **கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் இரண்டு சூழ்நிலைகளைத் தரவும்.** *[Govt. MQP & QY-'19; Aug-'21]*

விடை. (i) இலாபப்பகிர்வு விகிதத்தில் மாற்றம் ஏற்படும்போது

(ii) கூட்டாண்மை நிறுவனத்தில் புதிய கூட்டாளி சேர்க்கப்படும் போது

(iii) கூட்டாண்மை நிறுவனத்தில் இருக்கும் கூட்டாளி ஒருவர் நிறுவனத்தை விட்டு விலகும்போது அல்லது கூட்டாளி ஒருவர் இறக்கும் போது

(iv) ஒரு கூட்டாண்மை நிறுவனத்தைக் கலைக்கும்போது

## III. குறுகிய வினாக்கள் :

1. **நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.** *[Govt. MQP-'19; PTA-5; Sep-2020; Aug-'21; SRT-'22]*

விடை. (i) **நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன் :** அதிக இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனம் அல்லது எதிர்காலத்தில் அதிக இலாபம் ஈட்டும் திறனைக் கொண்டுள்ள ஒரு நிறுவனம் அதிகமான நற்பெயர் மதிப்பினைக் கொண்டிருக்கும்.

(ii) **வியாபார நிறுவனத்தின் சாதகமான அமைவிடம் :** வியாபார நிறுவனமானது வாடிக்கையாளர்களால் எளிதில் சென்றடையக் கூடிய முக்கிய இடத்தில் அமைந்திருந்தால், அது அதிக வாடிக்கையாளர்களைக் கவரும். எனவே, அந்நிறுவனம் அதிக மதிப்பிலான நற்பெயரைக் கொண்டிருக்கும்.

(iii) **நல்ல தரமான பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதல் :** நல்ல தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதால் வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றிருக்கும் நிறுவனத்தின் நற்பெயர் அதிகமாக இருக்கும்.

(iv) **வியாபார நிறுவனத்தின் கால அளவு :** நீண்ட ஆண்டுகள் வணிகத்தை நடத்திவரும் நிறுவனத்தை வாடிக்கையாளர் நன்கு அறிந்திருப்பதால் அந்த நிறுவனம் அதிக நன்மதிப்பைக் கொண்டிருக்கும்.

(v) **போட்டியின் அளவு :** போட்டியே இல்லாத அல்லது குறைவான போட்டியைக் கொண்டுள்ள நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு அதிகமானதாக இருக்கும்.

(vi) **பிறகாரணிகள் :** உரிமையாளரின் பிரபலம், ஈர்க்கக்கூடிய விளம்பரம், வாடிக்கையாளரிடம் நெருங்கிய தொடர்பு போன்ற பிற காரணிகளும் தொழிலின் நற்பெயரின் மதிப்பை உயர்த்தக் கூடியதாகும்.

2. **உயர் இலாப முறையில் நற்பெயர் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?** *[PTA-2]*

விடை. (i) இம்முறைகளில் நற்பெயரின் மதிப்பைக் கண்டறிய உயர் இலாபம் அடிப்படையாக உள்ளது. ஒரு வியாபாரத்தின் உயர் இலாபம் என்பது சாதாரண இலாபத்தை விட கூடுதலாக உள்ள சராசரி இலாபம் ஆகும்.

www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(ii) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம். சராசரி இலாபம், குறிப்பிட்ட ஆண்டுகளின் சரிக்கட்டப்பட்ட ஈட்டிய இலாபங்கள் கூட்டப்பட்டு, மொத்த ஆண்டுகளின் எண்ணிக்கையால் வகுக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுகிறது. சாதாரண இலாபம் என்பது ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில் வழக்கமாக ஈட்டும் இலாபம் ஆகும்.

(iii) சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் × சாதாரண இலாப விகிதம்

(iv) பயன்படுத்தப்பட்ட முதல் = நிலைச் சொத்துகள் + நடப்புச் சொத்துகள் – நடப்புப் பொறுப்புகள்

(v) சாதாரண இலாப விகிதம் = ஒரு தொழிலில் ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில் ஈட்டும் இலாப விகிதம்

**3. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு எவ்வாறு கணக்கிடப்படுகிறது?**

விடை. (i) மூலதனமாக்க முறையில் நற்பெயர் என்பது, வியாபாரத்தின் பயன்படுத்தப்பட்ட முதலைவிட கூடுதலாக உள்ள மூலதனமாக்கப்பட்ட சராசரி இலாபம் ஆகும்.

(ii) நற்பெயர் = வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு – பயன்படுத்தப்பட்ட முதல்

(iii) சராசரி இலாபத்தைச் சாதாரண இலாப விகிதத்தின் அடிப்படையில் மூலதனமாக்குதல் மூலம் வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பை கணக்கிடலாம்.

(iv) வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு = $\frac{\text{சராசரி இலாபம்}}{\text{சாதாரண இலாப விகிதம்}} \times 100$

**4. பின்வரும் விவரங்களிலிருந்து சராசரி இலாபம் கணக்கிடவும்.** *[Mar-2020]*
**2016; ₹8,000; 2017; ₹10,000; 2018; ₹9,000;**

**தீர்வு :**

சராசரி இலாபம் $= \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

$= \frac{8{,}000 + 10{,}000 + 9{,}000}{3} = \frac{27{,}000}{3}$

∴ சராசரி இலாபம் = ₹9,000

**5. சராசரி இலாபம் ₹15,000 ஆக இருக்கும்போது 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.**

**தீர்வு :**

நற்பெயர் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 15,000 × 2

நற்பெயர் = ₹30,000

## IV. பயிற்சி வினாக்கள் :

**சாதாரண சராசரி இலாபமுறை**

**1. ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு :** *[HY-'19; Sep-2020; SRT-'22]*
**2014; ₹10,000; 2015; ₹11,000; 2016; ₹12,000; 2017; ₹13,000; மற்றும் 2018; ₹14,000;**

**5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.**

**தீர்வு :**

நற்பெயர் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

சராசரி இலாபம் $= \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

$= \frac{10{,}000 + 11{,}000 + 12{,}000 + 13{,}000 + 14{,}000}{5} = \frac{60{,}000}{5}$ = ₹12,000



www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



சராசரி இலாபம் = ₹12,000

நற்பெயர் = 12,000 × 2 = 24,000

நற்பெயர் = ₹24,000

2. பின்வரும் விவரங்களிலிருந்து, கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும். *[PTA-2; QY-'19]*

| ஆண்டு | முடிவு | தொகை ₹ |
|---|---|---|
| 2015 | இலாபம் | 5,000 |
| 2016 | இலாபம் | 8,000 |
| 2017 | நட்டம் | 3,000 |
| 2018 | இலாபம் | 6,000 |

**தீர்வு :**

நற்பெயர் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{5,000 + 8,000 - 3,000 + 6,000}{4} = \frac{16,000}{4} = ₹4,000$$

சராசரி இலாபம் = ₹4,000

நற்பெயர் = 4,000 × 3 = 12,000

நற்பெயர் = ₹12,000



3. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து, கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளான இலாபங்கள் முறையே ₹10,000, ₹12,500, ₹12,000 மற்றும் ₹11,500.

(ஆ) வியாபாரம் கூட்டாளிகளில் ஒருவரால் நடத்தப்பட்டது. அக்கூட்டாளியின் நியாயமான உழைப்பூதியம் ஆண்டுக்கு ₹1,500. இந்தத் தொகை மேற்கண்ட இலாபங்களைக் கணக்கிடும்போது சேர்க்கப்படவில்லை.

**தீர்வு :** *[PTA-5; July-'22]*

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{10,000 + 12,500 + 12,000 + 11,500}{4}$$

$$= \frac{46,000}{4} = ₹11,500$$

| | | |
|---|---|---|
| கூட்டாளியின் ஊதியத்தினைச் சரிக்கட்டுவதற்கு முன் சராசரி இலாபம் | = | ₹11,500 |
| கழிக்க : கூட்டாளியின் ஊதியம் | = | ₹1,500 |
| சராசரி இலாபம் | = | ₹10,000 |

நற்பெயர் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 10,000 × 3 = 30,000

நற்பெயர் = ₹30,000



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**4. ஸ்ரீதேவி நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து, 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 4 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.** *[PTA-1]*

**(அ) டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018-ன் இலாபங்கள் முறையே ₹1,75,000, ₹1,50,000 மற்றும் ₹2,00,000.**

**(ஆ) 2016ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹45,000 சேர்ந்துள்ளது.**

**(இ) 2017ஆம் ஆண்டின் இறுதிச் சரக்கிருப்பு ₹30,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.**

**தீர்வு :**

**சரிக்கட்டப்பட்ட இலாபம் கணக்கிடுதல்**

| விவரம் | 2016 ₹ | 2017 ₹ | 2018 ₹ |
|---|---|---|---|
| இலாபம் | 1,75,000 | 1,50,000 | 2,00,000 |
| **கழிக்க :** திரும்பத் திரும்ப நிகழா வருமானம் | 45,000 | – | – |
| | 1,30,000 | 1,50,000 | 2,00,000 |
| **கழிக்க :** இறுதிச் சரக்கிருப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டது | – | 30,000 | – |
| | 1,30,000 | 1,20,000 | 2,00,000 |
| கூட்டுக : தொடக்கச் சரக்கிருப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டது | – | – | 30,000 |
| சரிக்கட்டப்பட்ட பின் இலாபம் | 1,30,000 | 1,20,000 | 2,30,000 |

**(குறிப்பு :** 2017-இல் இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டிருக்கும் போது 2018-இல் தொடக்கச் சரக்கிருப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டதாகிறது.]

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{1,30,000 + 1,20,000 + 2,30,000}{3}$$

$$= \frac{4,80,000}{3} = ₹1,60,000$$

நற்பெயர் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 1,60,000 × 4 = ₹6,40,000

நற்பெயர் = ₹6,40,000)

**5. கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு :** *[PTA-2, 5; SRT & July-'22]*

**(i) ஈட்டிய இலாபங்கள்: 2016 : ₹25,000; 2017 : ₹23,000; மற்றும் 2018 : ₹26,000;**

**(ii) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹2,500 சேர்ந்துள்ளது.**

**(iii) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ₹3,500 குறைக்கப்பட்டது.**

**(iv) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹250 என மதிப்பிடப்பட்டது.**

**3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.**



www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# அலகு 7

# நிறுமக் கணக்குகள்

## பொருளடக்கம்

7.1 அறிமுகம்

7.2 நிறுமத்தின் பொருள் மற்றும் வரையறை

7.3 நிறுமத்தின் பண்புகள்

7.4 பங்குகளின் பொருள் மற்றும் வகைகள்

7.5 பங்குமுதலின் பிரிவுகள்

7.6 நேர்மைப் பங்குகள் வெளியீடு

7.7 நேர்மைப் பங்குகள் வெளியிடுவதற்கான செயல்முறை

7.8 ரொக்கத்திற்கு தவணைமுறையில் பங்குகளை வெளியிடுதல்

- 7.8.1 குறை ஒப்பம்
- 7.8.2 மிகை ஒப்பம்
- 7.8.3 அழைப்பு முன் பணம்
- 7.8.4 அழைப்பு நிலுவை
- 7.8.5 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தல்
- 7.8.6 ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளை மறு வெளியீடு செய்தல்
- 7.8.7 பங்குகளை முனைமத்தில் வெளியிடுதல்

7.9 மொத்தத் தொகையில் ரொக்கத்திற்கு பங்குகளை வெளியீடு செய்தல்

7.10 ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக பங்குகளை வெளியிடுதல்

www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



# சுய ஆய்வு வினாக்கள்

**I. சரியான விடையை தேர்வு செய்யவும் :**

**1. முன்னுரிமைப் பங்கு என்பது**
*[Govt. MQP-'19; PTA-1; Aug-'21; SRT-'22]*

**(i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு**
**(ii) கலைப்பின்போது பங்கு முதலை திரும்பப்பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு**

(அ) (i) மட்டும் சரியானது
(ஆ) (ii) மட்டும் சரியானது
(இ) (i) மற்றும் (ii) சரியானது
(ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

**[விடை. (இ) (i) மற்றும் (ii) சரியானது]**

**2. நிறுமக் கலைப்பின்போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்.**
*[PTA-1; QY-'19; Mar-2020; SRT, May & July-'22]*

(அ) அங்கீகரிக்கப்பட்ட முதல்
(ஆ) அழைக்கப்பட்ட முதல்
(இ) முதலினக் காப்பு
(ஈ) காப்பு முதல் **[விடை. (ஈ) காப்பு முதல்]**

**3. ஒறுப்பிழப்பு செய்யும்போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?** *[PTA-2]*

(அ) முகமதிப்பு (ஆ) பெயரளவு மதிப்பு
(இ) செலுத்தப்பட்ட தொகை
(ஈ) அழைக்கப்பட்ட தொகை

**[விடை. (ஈ) அழைக்கப்பட்ட தொகை]**

**4. ஒறுப்பிழப்புச் செய்த பங்குகளை மறுவெளியீடு செய்த பிறகு, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்படுவது** *[PTA-3, 6; HY-'19]*

(அ) பொதுக்காப்பு கணக்கிற்கு
(ஆ) முதலினக் காப்பு கணக்கிற்கு
(இ) பத்திர முனைமக் கணக்கிற்கு
(ஈ) உபரி கணக்கிற்கு

**[விடை. (ஆ) முதலினக் காப்பு கணக்கிற்கு]**

**5. முகமதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு**
*[PTA-4; Sep-2020; SRT & May-'22]*

(அ) பத்திர முனைமக் கணக்கு
(ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு
(இ) பங்குமுதல் கணக்கு
(ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு

**[விடை. (அ) பத்திர முனைமக் கணக்கு]**

**6. பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது?**
*[PTA-5, 6; May-'22]*

(அ) வெளியிடப்பட்ட பங்கு முதல் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலை விட ஒரு போதும் அதிகமாக இருக்கக் கூடாது.
(ஆ) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில் வெளியிடப்பட்ட பங்குமுதல், ஒப்பிய பங்கு முதலை விட குறைவாக இருக்கும்.
(இ) காப்பு முதல் நிறுமத்தை கலைக்கும்போது செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது.
(ஈ) செலுத்தப்பட்ட பங்குமுதல், அழைக்கப்பட்ட பங்கு முதலின் ஒரு பகுதி ஆகும்.

**[விடை. (ஆ) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில் வெளியிடப்பட்ட பங்குமுதல், ஒப்பிய பங்கு முதலை விட குறைவாக இருக்கும்.]**

**7. சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் கணக்கு**
*[PTA-5; HY-'19; Mar-2020; SRT & July-'22]*

(அ) விற்பனையாளர் க/கு
(ஆ) பற்பல சொத்துகள் க/கு
(இ) பங்கு முதல் க/கு
(ஈ) வங்கி க/கு **[விடை. (இ) பங்கு முதல் க/கு]**

**8. சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையை தேர்ந்தெடுக்கவும்**
*[PTA-4; Mar-2020]*

| | | | | |
|---|---|---|---|---|
| (A) | குறை ஒப்பம் | - | (i) | முன்கூட்டிச் செலுத்திய அழைப்பு பணம் |
| (B) | மிகை ஒப்பம் | - | (ii) | வெளியிட்ட பங்குகளை விட அதிகமாக ஒப்பப்பட்டது |
| (C) | அழைப்பு நிலுவை | - | (iii) | வெளியிட்ட பங்குகளை விட குறைவாக ஒப்பப்பட்டது |
| (D) | அழைப்பு முன்பணம் | - | (iv) | செலுத்தப் பெறாத அழைப்பு பணம் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (அ) | (i) | (ii) | (iii) | (iv) |
| (ஆ) | (iv) | (iii) | (ii) | (i) |
| (இ) | (iii) | (ii) | (iv) | (i) |
| (ஈ) | (iii) | (iv) | (i) | (ii) |

**[விடை. (இ) A -(iii), B - (ii), C - (iv), D - (i)]**



www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**9. ₹8 செலுத்தப்பட்ட, ₹10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை** *[PTA-3]*

(அ) பங்கொன்று ₹10

(ஆ) பங்கொன்று ₹8

(இ) பங்கொன்று ₹5

(ஈ) பங்கொன்று ₹2 **[விடை. (ஈ) பங்கொன்று ₹2]**

**10. சுப்ரீம் நிறுமம் பங்கொன்று ₹10 மதிப்புடைய 100 பங்குகளை இறுதி அழைப்புத்தொகை ₹2 செலுத்தாததால் ஒறுப்பிழப்பு செய்தது. அவை அனைத்தும் பங்கொன்று ₹9 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. முதலினக் காப்புக்கு மாற்றப்பட வேண்டிய தொகை.** *[Govt. MQP-'19; PTA-2]*

(அ) ₹ 700 (ஆ) ₹800

(இ) ₹900 (ஈ) ₹1,000

**[விடை. (அ) ₹ 700]**

## II. மிகக் குறுகிய வினாக்கள் :

**1. பங்கு என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக?** *[PTA-1; Aug-'21; SRT-'22]*

விடை. (i) ஒரு நிறுமத்தின் முதல் குறிப்பிட்ட பண மதிப்பிலான சிறிய அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும்.

(ii) இந்த அலகுகள் 'பங்குகள்' என அழைக்கப்படுகின்றன.

**வகைகள்:** (i) முன்னுரிமைப் பங்குகள்

(ii) நேர்மைப் பங்குகள்

**2. மிகை ஒப்பம் என்றால் என்ன?** *[PTA-6; SRT-'22]*

விடை. வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட விண்ணப்பிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அது மிகை ஒப்பம் எனப்படும்.

**3. அழைப்பு நிலுவை என்பதன் பொருள் என்ன?** *[PTA-3]*

விடை. (i) பங்குதாரர் ஒருவர் தான் செலுத்த வேண்டிய ஒதுக்கீட்டுத் தொகை அல்லது அழைப்புத் தொகையை செலுத்தத் தவறினால், இன்னமும் செலுதப்படாமல் உள்ள தொகை 'அழைப்பு நிலுவை' எனப்படும்.

(ii) பிறிதொரு வகையில் கூற வேண்டுமானால் அழைக்கப்பட்டும், செலுத்தப்படாமல் உள்ள தொகை 'அழைப்பு நிலுவை' எனப்படும்.

**4. பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறுகுறிப்பு வரையவும்.** *[PTA-4]*

விடை. நிறுமம் பங்குகளை முகமதிப்பைவிட அதிகமான விலையில் வெளியீடு செய்தால் அது முனைமத்தில் வெளியிடுதல் எனப்படும். மிகுதியான தொகை முனைமம் என்றழைக்கப்படும்.

**5. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?** *[PTA-5]*

விடை. (i) பங்குதாரர் ஒருவர் ஒதுக்கீட்டு பணத்தையோ அல்லது அழைப்புப் பணத்தையோ செலுத்தத் தவறினால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும்.

(ii) ஒறுப்பிழப்பு செய்யும் போது, ஒதுக்கீடு ரத்து செய்யப்படுவதால், அந்த அளவிற்கு செலுத்திய முதல் குறைக்கப்படும். ஒறுப்பிழப்பு செய்ததற்கு பிறகு அந்த நபர் பங்குதாரர் என்ற தகுதியை இழக்கிறார்.

## III. குறுகிய வினாக்கள் :

**1. முன்னுரிமைப் பங்களுக்கும், நேர்மைப் பங்குகளுக்குமுள்ள வேறுபாடுகளை கூறவும்.** *[PTA-5]*

விடை.

| வ. எண். | முன்னுரிமைப் பங்குகள் | நேர்மைப் பங்குகள் |
|---|---|---|
| 1. | பிற வகையான பங்குகள் பெற்றிருக்கும் உரிமைகளை விட, சிலவற்றில் முன்னுரிமைப் பெற்றிருக்கும் பங்குகள் முன்னுரிமைப் பங்குகள் எனப்படுகின்றன. | முன்னுரிமைப் பங்குகள் அல்லாத பங்குகள் நேர்மைப் பங்குகள் ஆகும் |
| 2. | நிறுமம் செயல்படும் வரை ஒரு குறிப்பிட்ட (நிலையான) பங்காதாயத்தை பெறுவதால், இவ்வகை பங்குநர்கள் முன்னுரிமை பெற்றுள்ளனர் | நேர்மைப் பங்குகளுக்கான பங்காதாய விகிதம் நிலையாக இருப்பதில்லை. |
| 3. | நிறுமம் கலைக்கப்படும் பொழுது பிற புறக்கடன்கள் அனைத்தையும் அடைத்த பின்னர், சொத்துக்கள் மிகுதியிருப்பின் முதலில் முன்னுரிமைப் பங்குநர்கட்கு முழு முதலையும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். | நிறுமக் கலைப்பின் போதும், முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கு முதலை திரும்ப செலுத்திய பிறகே நேர்மைப் பங்குதாரர்களுக்கு செலுத்தப்படும். |



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**2. அழைப்பு முன்பணம் குறித்து சுருக்கமாக எழுதவும்.** *[PTA-6]*

விடை. (i) பங்கின் அழைக்கப்பட்ட மதிப்பை விட அதிகமாகப் பெறப்பட்ட தொகை அழைப்பு முன்பணம் எனப்படும். இது பங்கு விண்ணப்பம் அல்லது பங்கு ஒதுக்கீடு அல்லது பங்கு அழைப்புக் கணக்கில் அதிகமாக பெறப்பட்ட தொகையாகும்.

(ii) அவ்வாறு அதிகமாகப் பெறப்பட்ட தொகையை திருப்பி அளிக்க வேண்டும் அல்லது எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய தொகைகளில் சரிக்கட்ட வேண்டும்.

(iii) அவ்வாறு எதிர்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய தொகைகளில் சரிக்கட்ட தீர்மானித்தால், அந்த அதிகமாகப் பெறப்பட்ட தொகையை அழைப்பு முன்பணம் என்ற தனிக் கணக்கிற்கு மாற்றலாம்.

(iv) அழைப்பு முன்பணம் நிறுமத்தின் பங்கு முதலில் ஒரு பகுதி அல்ல மற்றும் அதற்கு பங்காதாயம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை.

(v) இது இருப்புநிலைக் குறிப்பில் இதர நடப்புப்பொறுப்புகளின் கீழ் காட்டப்படும்.

**3. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீடு என்றால் என்ன?**

விடை. (i) ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்கள் நிறுமத்தால் மறுவெளியீடு செய்யப்படலாம். அப்பங்குள் எந்த விலையிலும் மறுவெளியீடு செய்யலாம்.

(ii) ஆனால், வெளியீட்டு விலை ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளின் செலுத்தப் பெறாத தொகையைக் காட்டிலும் குறைவாக இருக்கக் கூடாது.

(iii) உதாரணமாக, ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட ஒரு பங்கின் மதிப்பு ₹10 அதற்கு ₹4 விண்ணப்பப் பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(iv) அப்பங்குகள் முழுவதும் செலுத்தப்பட்டவைகளாக மறுவெளியீடு செய்யப்பட்டன. அதன் புதிய விலை குறைந்த பட்சமாக ₹6 (10 – 4) என நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(v) ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் நட்டத்தில் மறு வெளியீடு செய்யப்படும் போது, அந்த நட்டம் ஒறுப்பிழப்பு கணக்கில் பற்று செய்யப்படுகிறது.

(vi) ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் முனைமத்தில் மறு வெளியீடு செய்யப்பட்டால், அந்த முனைமத்தொகை பத்திர முனைமக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

**4. சிறுகுறிப்பு வரைக.**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட முதல்**

**(ஆ) காப்புமுதல்**

விடை. **(அ) அங்கீகரிக்கப்பட்ட முதல்**

இது அமைப்பு முறையேட்டின் படி அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆகும். இது அதிகபட்சமாக முதலாக திரட்ட அனுமதிக்கப்பட்ட தொகை. இதனைப் 'பதிவு செய்யப்பட்ட முதல்' அல்லது 'பெயரளவு முதல்' என்றும் கூறலாம்.

**(ஆ) காப்புமுதல்**

ஒரு நிறுமம் அதன் கலைப்பின் போது மட்டும் அழைப்பு விடுக்கலாம் என ஒதுக்கி வைத்துள்ள அழைக்கப்பட்ட முதலின் ஒரு பகுதியினை 'காப்பு முதல்' என்று அழைக்கலாம்.

**5. ரொக்கம் தவிர இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு என்றால் என்ன?** *[SRT-'22]*

விடை. நிறுமம், நிலம் மற்றும் கட்டடம், இயந்திரம் போன்ற நிலைச் சொத்துகளை வாங்கும் போது, பங்குகளை ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக வெளியிடலாம். இத்தருணத்தில் கீழ்க்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகளைப் பதிய வேண்டும்.

| நாள் | | விவரம் | பே. ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | (i) | சொத்துகளை வாங்கும் போது குறிப்பிட்ட சொத்து க/கு ப | | XXX | |
| | | விற்பனையாளர் க/கு | | | XXX |
| | (ii) | பங்குகளை வெளியிடும் போது விற்பனையாளர் க/கு ப | | XXX | |
| | | நேர்மைப் பங்கு முதல் க/கு | | | XXX |
| | | பத்திர முனைமக் க/கு (முனைமத்தில் வெளியிட்டால்) | | | XXX |

ஒரு நிறுமம் வணிக நிறுவனத்தை வாங்குவதற்காகவும், தோற்றுவிப்பாளர்களுக்கு அவர்களின் பணிக்காகவும், தரகர் மற்றும் ஒப்புறுதியாளர்களுக்கு கழிவு கொடுப்பதற்காகவும் போன்ற ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக பங்குகளை வெளியிடலாம்.



www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



IV. பயிற்சி கணக்குகள் :

1. புராகிரஸ் வரையறு நிறுமம் 50,000 சாதாரணப் பங்குகளை, பங்கொன்று ₹10 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹2, ஒதுக்கீட்டின் போது ₹4 முதலாவது அழைப்பின் போது ₹2 மற்றும் இரண்டாவது அழைப்பின் போது ₹2 செலுத்தப்பட்ட வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன மற்றும் அனைத்து தொகைகளும் முறையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும். *[SRT-'22]*

தீர்வு :

புராகிரஸ் வரையறு நிறுமத்தின் ஏடுகளில்
குறிப்பேட்டுப்பதிவுகள்

| நாள் | விவரம் | பே. ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு (50,000 × 2) ப<br>பங்கு விண்ணப்பக் க/கு<br>(விண்ணப்பத் தொகை பெற்றது) | | 1,00,000 | 1,00,000 |
| | பங்கு விண்ணப்பக் க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது) | | 1,00,000 | 1,00,000 |
| | பங்கு ஒதுக்கீட்டுக் க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டு தொகை பெற வேண்டியது) | | 2,00,000 | 2,00,000 |
| | வங்கி க/கு (50,000 × 4) ப<br>பங்கு ஒதுக்கீட்டுக் க/கு<br>(ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது) | | 2,00,000 | 2,00,000 |
| | பங்கு முதல் அழைப்பு க/கு (50,000 × 2) ப<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை பெற வேண்டியது) | | 1,00,000 | 1,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு முதல் அழைப்பு க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை பெற்றது) | | 1,00,000 | 1,00,000 |
| | பங்கு இரண்டாவது அழைப்பு க/கு (50,000 × 2) ப<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு மீதான இரண்டாம் அழைப்புத் தொகை பெற வேண்டியது) | | 1,00,000 | 1,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு இரண்டாவது அழைப்பு க/கு<br>(இரண்டாவது அழைப்புத் தொகை பெற்றது) | | 1,00,000 | 1,00,000 |

குறை ஒப்பம் :

2. சம்பத் நிறுமம் 25,000 நேர்மைப் பங்குகளை, பங்கு ஒன்று ₹10 என பொதுமக்களுக்கு வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹3, ஒதுக்கீட்டின் போது ₹4, முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹3 செலுத்தப்பட வேண்டும். பொதுமக்களால் 24,000 பங்குகள் ஒப்பப்பட்டன. இயக்குனர்கள் அனைத்து பங்குகளையும் ஒதுக்கீடு செய்தனர். அதற்காக தொகை முழுவதும் முறையாகப் பெறப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். *[PTA-5; SRT-'22]*



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



# கூடுதல் வினாக்கள் மற்றும் விடைகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :**

**1 மதிப்பெண்**

**(i) கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பங்கு வெளியீட்டின் மூலம் பெறப்படும் பணம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

(அ) பங்குகள் (ஆ) பங்கு முதல்

(இ) பங்கு விண்ணப்பம் (ஈ) பங்கு ஒதுக்கீடு

[விடை. (ஆ) பங்கு முதல்]

**2. நிறுமங்கள் வெளியிடும் பங்குகளை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?**

(அ) இரண்டு (ஆ) மூன்று

(இ) நான்கு (ஈ) ஐந்து

[விடை. (அ) இரண்டு]

**3. வெளியிட்ட முதலில், வாங்குவதற்கு ஒப்புக்கொண்ட, மேலும் நிறுமத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட முதல்**

(அ) ஒப்பிய முதல் (ஆ) வெளியிட்ட முதல்

(இ) அங்கீகரிக்கப்பட்ட முதல்

(ஈ) செலுத்தப்பட்ட முதல்

[விடை. (அ) ஒப்பிய முதல்]

**4. ஒரு நிறுமம் அதன் கலைப்பின் போது மட்டும் அழைப்பு விடுக்கலாம் என ஒதுக்கி வைத்துள்ள முதலின் ஒரு பகுதியினை எவ்வாறு அழைக்கலாம்?**

(அ) ஒப்பிய முதல் (ஆ) காப்பு முதல்

(இ) வெளியிட்ட முதல்

(ஈ) செலுத்தப்பட்ட முதல்

[விடை. (ஆ) காப்பு முதல்]

**5. தொடக்க பொது முனைவு மற்றும் கூடுதல் முனைவுகளையும் உள்ளடக்கியது எது?**

(அ) தனியார் ஒதுக்கு (ஆ) பொது வெளியீடு

(இ) உரிமை வெளியீடு

(ஈ) மேலூதிய பங்கு வெளியீடு

[விடை. (ஆ) பொது வெளியீடு]

**6. செபியின் வழிகாட்டுதலின்படி, குறைந்த அளவு பங்கு விண்ணப்பத் தொகை, வெளியீட்டு விலையில் எத்தனை சதவீதத்திற்கு குறைவாக இருக்கக் கூடாது?**

(அ) 10 (ஆ) 15 (இ) 25 (ஈ) 5

[விடை. (இ) 25]

**7. இருப்புநிலைக் குறிப்பில் இதர நடப்புப் பொறுப்புகளின் கீழ் காட்டப்படுவது எது?**

(அ) அழைப்பு முன் பணம்

(ஆ) அழைப்பு நிலுவை

(இ) மிகை ஒப்பம்

(ஈ) குறுமப் பங்கொப்பம்

[விடை. (அ) அழைப்பு முன் பணம்]

**8. அழைக்கப்பட்டும், செலுத்தப்படாமல் உள்ள தொகை எவ்வாறு அழைக்கப்படும்?**

(அ) அழைப்பு முன் பணம்

(ஆ) அழைப்பு நிலுவை (இ) மிகை ஒப்பம்

(ஈ) குறுமப் பங்கொப்பம்

[விடை. (ஆ) அழைப்பு நிலுவை]

**9. ₹ 10 முகமதிப்புடைய பங்கு ₹12க்கு வெளியிடப் பட்டால் அது எவ்வாறு அழைக்கப்படும்?**

(அ) முனைமத்தில் வெளியீடு

(ஆ) முகமதிப்பில் வெளியீடு

(இ) தள்ளுபடியில் வெளியீடு

(ஈ) பங்கு ஒறுப்பிழப்பு

[விடை. (அ) முனைமத்தில் வெளியீடு]

**(ii) பட்டியல் I–ல் உள்ளவற்றை பட்டியல் II–உடன் பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தெரிவு செய்க.**

1.

| பட்டியல் - I | | பட்டியல் - II | |
|---|---|---|---|
| (i) | விண்ணப்பத் தொகை | 1. | 90% |
| (ii) | குறும ஒப்பம் | 2. | 5% |
| (iii) | அழைப்பு நிலுவை | 3. | 6% |
| (iv) | அழைப்பு முன்பணம் | 4. | 25% |

குறியீடுகள் :

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| (அ) | 4 | 1 | 2 | 3 |
| (ஆ) | 3 | 1 | 4 | 2 |
| (இ) | 2 | 3 | 4 | 1 |
| (ஈ) | 2 | 4 | 1 | 3 |

[விடை. (அ) (i) - 4, (ii) - 1, (iii) - 2, (iv) - 3]



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores





2.

| | பட்டியல் - I | | பட்டியல் - II |
|---|---|---|---|
| (i) | பொது வெளியீட்டிற்கான குறைந்தபட்ச நாட்கள் | 1. | 90 நாட்கள் |
| (ii) | இரு அழைப்புகளுக்கான கால இடைவெளி | 2. | 3 நாட்கள் |
| (iii) | குறைந்தளவு பங்கெடுப்பு | 3. | 10 நாட்கள் |
| (iv) | பொது வெளியீட்டிற்கான அதிகபட்ச நாட்கள் | 4. | ஒரு மாதம் |

குறியீடுகள் :

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| (அ) | 3 | 4 | 2 | 1 |
| (ஆ) | 2 | 1 | 4 | 3 |
| (இ) | 4 | 3 | 2 | 1 |
| (ஈ) | 2 | 4 | 1 | 3 |

[விடை. (ஈ) (i) - 2, (ii) - 4, (iii) - 1, (iv) - 3]

**(iii) கீழ்க்கண்ட கோடிட்ட இடத்திற்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ______ முதல் பல்வேறு சிறிய அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும்.**

(அ) நிறுமங்களின் (ஆ) கூட்டாளிகளின்

(இ) தனியாள் வணிகத்தின் (ஈ) கூட்டாண்மையின்

[விடை. (அ) நிறுமங்களின்]

**2. பங்குதாரர்களுக்கான இலாபம் ______ தொகையாக பகிர்ந்தளிக்கப்படுகிறது.**

(அ) மீதித் (ஆ) கூட்டு

(இ) ஈவுத் (ஈ) சராசரி

[விடை. (இ) ஈவுத்]

**3. ______ என்பது தன்னார்வமாக செயல்படும் நபர்களின் சங்கம்.**

(அ) தனியாள் வணிகம் (ஆ) கூட்டாண்மை

(இ) கூட்டுறவுச் சங்கம் (ஈ) நிறுமம்

[விடை. (ஈ) நிறுமம்]

**4. ஒரு நிறுமம் அதற்கான ______ பெற்றிருக்கலாம்.**

(அ) தன்னிச்சையான அமைப்பை

(ஆ) பொது முத்திரையை

(இ) வரையறு பொறுப்பை

(ஈ) தனிச்சட்ட உரு

[விடை. (ஆ) பொது முத்திரையை]

**5. நேர்மைப் பங்குகளுக்கான ______ விகிதம் நிலையாக இருப்பதில்லை.**

(அ) குறுமப்பங்கொப்பம் (ஆ) பங்காதாயம்

(இ) இரண்டும்

(ஈ) இவற்றுள் எதுவுமில்லை

[விடை. (ஆ) பங்காதாயம்]

**6. வாங்குவதற்கென வெளியிடப்பட்ட அங்கீகரித்த முதலின் ஒரு பகுதி ______ ஆகும்.**

(அ) ஒப்பிய முதல்

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட முதல்

(இ) செலுத்தப்பட்ட முதல்

(ஈ) வெளியிட்ட முதல்

[விடை. (ஈ) வெளியிட்ட முதல்]

**7. ஒரு பொது நிறுமம் தகவலறிக்கை மூலம் பொது மக்களுக்கு வெளியிடும் நேர்மைப் பங்கு வெளியீட்டினை ______ என்று அழைப்பர்.**

(அ) பொது வெளியீடு

(ஆ) தனியார் ஒதுக்கு

(இ) உரிமை வெளியீடு

(ஈ) மேலூதிய பங்கு வெளியீடு

[விடை. (அ) பொது வெளியீடு]

**8. நிறுமத்தில் ஏற்கனவே பங்குதாரர்களாக உள்ளவர்களுக்கு பகிர்ந்துதரா இலாபத்திலிருந்து இலவசமாக நேர்மைப் பங்குகளை வெளியிடுவது ______ எனப்படும்.**

(அ) தனியார் ஒதுக்கு

(ஆ) பொது வெளியீடு

(இ) மேலூதிய பங்கு வெளியீடு

(ஈ) உரிமை வெளியீடு

[விடை. (இ) மேலூதிய பங்கு வெளியீடு]

**9. விண்ணப்பத் தொகையானது பங்கின் பெயரளவு மதிப்பில் குறைந்தது ______ சதவீதமாக இருக்க வேண்டும்.**

(அ) 2 (ஆ) 3 (இ) 4 (ஈ) 5

[விடை. (ஈ) 5]

**10. ______ பெறப்படவில்லையெனில் பெற்ற அனைத்து விண்ணப்பத் தொகையையும் விண்ணப்பத்தாரர்களுக்கு திருப்பி அளித்திட வேண்டும்.**

(அ) குறுமப்பங்கொப்பம் (ஆ) பங்காதாயம்

(இ) இரண்டும்

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

[விடை. (அ) குறுமப்பங்கொப்பம்]

www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



11. நிறுமத்தின் செயல்முறை விதிகளில் கொடுக்கப்பட்டிருக்கும் விதிகளின் படி ______ மேற்கொள்ளப்பட வேண்டும்.

(அ) அழைப்புகள் (ஆ) பங்குகள்
(இ) விண்ணப்பங்கள்
(ஈ) இவற்றில் எதுவுமில்லை

[விடை. (அ) அழைப்புகள்]

12. இரண்டு அழைப்புகளுக்கிடையே ______ இடைவெளி இருக்க வேண்டும்.

(அ) ஒரு மாத கால (ஆ) மூன்று மாத கால
(இ) ஆறு மாத கால (ஈ) ஒரு வருட கால

[விடை. (அ) ஒரு மாத கால]

13. ஒரு அழைப்பின் தொகை பங்கின் முகமதிப்பில் ______ க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(அ) 10% (ஆ) 15%
(இ) 25% (ஈ) 100%

[விடை. (இ) 25%]

14. அழைப்பு நிலுவை வட்டி வீதம் ஆண்டுக்கு______ மேல் மிகக் கூடாது.

(அ) 2% (ஆ) 3% (இ) 5% (ஈ) 10%

[விடை. (ஈ) 10%]

15. வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட ஒப்பப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் எது ______ எனப்படும்.

(அ) குறை ஒப்பம் (ஆ) மிகை ஒப்பம்
(இ) அழைப்பு முன்பணம்
(ஈ) இவை அனைத்தும்

[விடை. (அ) குறை ஒப்பம்]

16. பங்கின் அழைக்கப்பட்ட மதிப்பைவிட அதிகமாகப் பெறப்பட்ட தொகை ______எனப்படும்.

(அ) மிகை ஒப்பம்
(ஆ) குறுமப் பங்கொப்பம்
(இ) அழைப்பு முன்பணம்
(ஈ) இவற்றில் எதுவுமில்லை

[விடை. (இ) அழைப்பு முன்பணம்]

17. ஒறுப்பிழப்பு செய்ததற்கு பிறகு அந்த நபர் ______என்ற தகுதியை இழக்கிறார்.

(அ) பங்குதாரர் (ஆ) மேலாளர்
(இ) இயக்குநர் (ஈ) வாடிக்கையாளர்

[விடை. (அ) பங்குதாரர்]

18. ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் நிறுமத்தால் ______ செய்யப்படலாம்.

(அ) விற்பனை
(ஆ) மறுவெளியீடு
(இ) வட்டம்
(ஈ) இவற்றில் எதுவுமில்லை

[விடை. (ஆ) மறுவெளியீடு]

19. ______ நிறுமத்தின் அலுவலக கையொப்பமாக கருதப்படுகிறது.

(அ) தனிச்சட்ட உருமம்
(ஆ) பொது முத்திரை
(இ) நீண்ட வாழ்நாள்
(ஈ) இவற்றில் எதுவுமில்லை

[விடை. (ஆ) பொது முத்திரை]

20. நிறுமத்தில் பங்குதாரர்களுடைய பொறுப்பு ______.

(அ) வரையறுக்கப்பட்டது
(ஆ) கட்டாயமாக்கப்பட்டது
(இ) பதிவு செய்யப்பட்டது
(ஈ) இவற்றில் எதுவுமில்லை

[விடை. (அ) வரையறுக்கப்பட்டது]

21. நிறுமத்தின் தணிக்கையாளர்களாக பட்டயக் கணக்காளர்கள் ______ ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் நியமிக்கப்படுகின்றனர்.

(அ) இயக்குநர்கள்
(ஆ) பங்குதாரர்களால்
(இ) உறுப்பினர்களால்
(ஈ) முதலீட்டாளர்களால்

[விடை. (ஆ) பங்குதாரர்களால்]

22. ______என்பது நிறுமத்தால் வெளியிடக் கூடிய அதிகபட்ச முதல்தொகை ஆகும்.

(அ) வெளியிட்ட முதல்
(ஆ) பெயரளவு அல்லது அங்கீகரிக்கப்பட்ட
(இ) ஒப்பிய பங்கு முதல்
(ஈ) அழைக்கப்பட்ட முதல்

[விடை. (ஆ) பெயரளவு அல்லது அங்கீகரிக்கப்பட்ட]

23. பொது வெளியீடு ______ நாட்களுக்கு அதிகமாக அனுமதிக்கப்படுவது இல்லை.

(அ) 5 (ஆ) 30 (இ) 10 (ஈ) 20

[விடை. (இ) 10]

www.surabooks.com



orders@surabooks.com Ph: 8124201000 / 8124301000

This is Only for Sample, Full Book Order Online or
